# இலக்கணக் குறிப்பறிதல்

**தமிழ் இலக்கணம்**

- **இலக்கணம் ஐந்து வகைப்படும்**
  1. எழுத்திலக்கணம்
  2. சொல்லிலக்கணம்
  3. பொருளிலக்கணம்
  4. யாப்பிலக்கணம்
  5. அணியிலக்கணம்

- **எழுத்தின் வகைகள்**

  எழுத்துக்கள் இரண்டு வகைப்படும்
  1. உயிரெழுத்துகள்
  2. சார்பெழுத்துகள்

- **முதலெழுத்துகளின் வகைகள்**

  முதலெழுத்துக்கள் இரண்டு வகைப்படும்
  1. உயிரெழுத்துகள்
  2. மெய்யெழுத்துகள்

- **உயிரெழுத்துகளின் வகைகள்**

  உயிரெழுத்துகள் இரண்டு வகைப்படும்
  1. குற்றெழுத்துகள் (அ, இ, உ, எ, ஒ)
  2. நெட்டெழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

- **மெய்யெழுத்துகளின் வகைகள்**

  மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும்
  1. வல்லினம் (க், ச், ட், த், ப், ற்)
  2. மெல்லினம் (ங், ஞ், ண், ந், ம், ன்)
  3. இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்)

- **ஆய்த எழுத்து**

  முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, முற்றாய்தம் ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

- **சார்பெழுத்து அதன் வகைகள்**

  முதல் எழுத்துக்களாகிய உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துகளையும் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும்.

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்
6. குற்றியலிகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

“உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
ப∴கிய இஉஐ ஔ ம∴கான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்”

நன்னூல்

## 1. எழுத்துகள்

முதலெழுத்துகள்(30)
சார்பெழுத்துகள்(10)

உயிரெழுத்துகள்(12)
மெய்யெழுத்துகள்(18)

உயிர்க்குற்றெழுத்துகள்(5) (அ, இ, உ, எ, ஒ)
உயிர்நெட்டெழுத்துகள்7 (ஆ,ஈ,ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

வல்லின மெய்யெழுத்துகள்(6) (க், ச், ட், த், ப், ற்)
மெல்லின மெய்யெழுத்துகள்(6) (ங், ஞ், ண், ந், ம், ன்)
இடையின மெய்யெழுத்துகள் (6) (ய், ர், ல், வ், ழ், ள்)

**அளபெடை**

"அளபெடை" என்பதற்கு "நீண்டு ஒலித்தல்" என்று பொருள். செய்யுளில் ஓசை குறையும் போது ஒரு சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் ஏழும் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதே அளபெடை எனப்படும்.

அளவு ⇒ மாத்திரை, எடை ⇒ எடுத்தல் என்பது பொருள்

எழுத்தின் மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்

➢ **மாத்திரை அளவு:**

உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் - ஒன்று
உயிர் நெடில், உயிர்மெய்நெடில் - இரண்டு
மெய், ஆய்தம் - மூன்று
உயிரளபெடை - நான்கு
ஒற்றளபெடை - ஐந்து

➢ **அளபெடையின் வகைகள்:**

அளபெடை இரண்டு வகைப்படும்.

1. உயிரளபெடை 2. ஒற்றளபெடை

**1. உயிரளபெடை**

உயிர் + அளபெடை = உயிரளபெடை

செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெட்டெழுத்துகள் ஏழும் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) அளபெடுக்கும் அவ்வாறு அளபெடுக்கும் போது அளபெடுத்தமையை அறிய நெட்டெழுத்துகளுக்கு இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பக்கத்தில் எழுதப்படும்.

- **உயிரளபெடையின் வகைகள்:**

உயிரளபெடை மூன்று வகைப்படும்.

ஐ. செய்யுளிசையளபெடை (அல்லது) இசைநிறையளபெடை
ஐஐ. இன்னிசையளபெடை
ஐஐஐ. சொல்லிசையளபெடை

**ஐ. செய்யுளிசையளபெடை**

செய்யுளில் ஓசையை நிறைவு செய்தற்பொருட்டு, சொல்லின் முதல், இடை, கடையிலுள்ள உயிர் நெட்டெழுத்துகள் அளபெடுத்து வருவதைச் செய்யுளிசையளபெடை என்பர். இதற்கு இசை நிறையளபெடை என்ற வேறு பெயரும் உண்டு.

எ.கா:

"ஏரின் உழாஅர் உழவர் பயலென்னும்
வாவுாரி வளங்குன்றிக் கால்"

இக்குறட்பாவில் "உழாஅர்" என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது. உழார் என்பது இயல்பான சொல்

(எ.கா) "கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடா அர் விழையும் உலகு"

இக்குறட்பாவில் கெடா என்பது கெடாஅ என இறுதியிலும், விடா என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்துவந்துள்ளது.

மேலும் சில எ.கா

1) உழாஅர் 2) படாஅர் 3) தொழூஉம்
4) தூஉ 5) தருஉம் 6) ஆஅதும்
7) ஓஒதல் 8) தொழாஅன் 9) உறாஅமை
10) பெறாஅ

அளபெடை

உறாஅமை – செய்யுளிசை அளபெடை

**ஐஐ. இன்னிசையளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு உயிர்க்குறில் நெடிலாகி, மேலும் அளபெடுப்பது இன்னிசையளபெடை ஆகும்.

எ.கா:

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

கெடுப்பதும், எடுப்பதும் என்று ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காகக் குறில் நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசையளபெடை எனப்படும்.

மேலும் சில எ.கா:

1) உள்ளதூஉம் 2) அதனினூஉங்கு

**ஐஐஐ. சொல்லிசையளபெடை**

செய்யுளில் ஓசை குன்றாத பொழுதும், பெயர்ச்சொல் வினையெச்சப் பொருளைத் தருவதற்காக அளபெடுப்பது சொல்லிசை அளபெடை எனப்படும்.

எ.கா: குடிதழிஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழிஇ நிற்கும் உலகு.

இக்குறட்பாவில் தழி, என்றிருப்பினும் செய்யுளின் ஓசை குறைவதில்லை 'தழீ' என்பது தழுவுதல் எனப் பொருள் தரும்.

பெயர்ச்சொல்லாகும் அச்சொல் 'தழ்இ' என அளபெடுத்தால் 'தழுவி' என வினையெச்சச் சொல்லாயிற்று.

"இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை நெடில்
அளபெடும் அவற்றவற் றினக்குறள் குறியே"
நன்னூல் - 91

**அளபெடை**

1. எழீஇ - சொல்லிசை அளபெடை
2. கடாஅ யானை, சாஅய் தோள் - இசைநிறை அளபெடைகள்
3. அதனினூஉங்கு - இன்னிசை அளபெடை

**அளபெடை**

1. ஒரீஇ, தழீஇ - சொல்லிசை அளபெடைகள்
2. தழீஇக்கொள்ள - சொல்லிசை அளபெடை
3. உறீஇ - சொல்லிசை அளபெடை
4. தாங்குறூஉம், வளர்க்குறூஉம் - இன்னிசை அளபெடைகள்
5. செய்கோ - 'ஓ' காரம் அசை நிலை
6. ஞான்றே - 'ஏ' காரம் அசை நிலை
7. தானே - ஏகாரம் பிரிநிலை
8. கள்வனோ - ஓகாரம் பிரிநிலை
9. விளைசெயம் ஆவதோ – ஓகாரம் எதிர்மறை
10. குன்றமோ பேயதோ, பூதமோ ஏதோ – ஓகாரங்கள் வினாப்பொருள்

**ஏகாரம்**

1. யானோ அரசன் - ஓகாரம் எதிர்மறை
2. அருவினை என்ப உளவோ – ஓகாரம் எதிர்மறை
3. யானே கள்வன் - ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது.

**ஏகாரம்**

1. செல்வர்க்கே - ஏகாரம் பிரிநிலைப் பொருளில் வந்தது
2. சீவகற்கே - ஏகாரம் தேற்றேகாரம்
3. காயமே, கண்ணே - ஓகாரங்கள் தேற்றேகாரங்கள்
4. புண்ணோ, இகழ் உடம்போ மெய் - ஓகாரம் எதிர்மறைகள்

**அளபெடை**

**2. ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்வதற்குச் சொல்லிலுள்ள மெய்யெழுத்து அளபெடுத்தலை ஒற்றளபெடை என்று அழைக்கிறோம்.

எ.கா: எங்ஙகிறை வனுள னென்பாய்.
வெ∴∴குவார்க் கில்லை வீடு

இத்தொடரில் வண்ண எழுத்துகளாக உள்ள ங் என்பதும் ∴ என்பதும் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யும். ∴ ஒன்றும் ஆகப் பதினோர் எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை எனப்படும்.

"ஙஞண நமன வயலன ஆய்தம்
அளபாம் குறிலிணை குறிற்கீழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே"
நன்னூல் - 92

**குற்றியலுகரம்**

குற்றியலுகரம் - குறுமை + இயல் + உகரம்
(கு, சு, டு, து, பு, று)

ஒரு மாத்திரையளவு ஒலிக்க வேண்டிய உகரம் அரை மாத்திரையளவாகக் குறைந்தொலிப்பது குற்றியலுகரமாகும்.

தனி நெடிலுடனோ, பல எழுத்துகளைத் தொடர்ந்தோ சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்யோடு சேர்ந்து வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரையளவே ஒலிக்கும். இதனையே குற்றியலுகரம் என்பர்.

பசு – காசு, படு – பாடு, அது – பந்து

மேற்கண்ட சொற்களில் பசு, படு, அது போன்ற சொற்கள் இதழ் குவிந்து நன்கு ஒலிக்கப்படுகிறது. இங்கு கு, சு, டு, து போன்ற எழுத்துக்களுக்கு ஒரு மாத்திரை அளவு.

ஆனால் காசு, பாடு, பந்து போன்ற சொற்களில் கு, சு, டு. து போன்ற எழுத்துக்களின் உகரம் குறைந்து ஒலிக்கப்படுகிறது. இதுவே குற்றியலுகரம் ஆகும்.

இங்கு கு, சு, டு. து ஆகிய எழுத்துக்கள் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கிறது.

1) தனி ஒரு குற்றெழுத்தை அடுத்து வரும் உகரம் எழுத்துகள் தனக்குரிய ஒரு மாத்திரை அளவாகவே ஒலிக்கிறது.

(எ.கா) அது, பசு, படு, பொது)

2) சொல்லுக்கு முதலிலும், இடையிலும் வரும் 'உகரம்' தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்காது.

3) சொல்லுக்கு இறுதியில் வரும் வல்லினம் மெய்களை (க், ச், ட், த், ப், ற்) ஊர்ந்து உகரம் (கு, சு, டு, து, பு, று) மட்டுமே தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும்.

சொல்லின் இறுதி எழுத்தாக நிற்கும் குற்றியலுகரத்திற்கு முன் உள்ள எழுத்தை நோக்க குற்றியலுகரம் ஆறு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

## குற்றியலுகரத்தின் வகைகள்

### குற்றியலுகரம் ஆறு வகைப்படும்

1) நெடில்தொடர்க் குற்றியலுகரம்
2) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
4) வன்தொடர்க் குற்றியலுகரம்
5) மென்தொடர்க் குற்றியலுகரம்
6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்

### 1) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

(தனி நெடில் என்பது உயிர் நெடிலாகவும், உயிர்மெய் நெடிலாகவும் இருக்கலாம்)

எ.கா: பாகு, காசு, தோடு, காது, சோறு

### 2) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்:

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

எ.கா: எ∴கு, அ∴கு, க∴சு

### 3) உயிர்தொடர்க் குற்றியலுகரம்:

உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் உயிர்த் தொடர்க்குற்றியலுகரம் ஆகும்.

எ.கா: அழகு, முரசு, பண்பாடு, எருது, மரபு, பாலாறு,

இச்சொற்களில் வல்லின மெய்களை ஊர்ந்து வந்த உகரம் (கு, சு, டு. து, பு, று) உயிரெழுத்தைத் தொடர்ந்து (ழு – ழ் + அ, ர – ர் + அ, பா – ப் + ஆ, ரு – ர் + உ, லா – ல் + ஆ) ஈற்றில் அமைந்து குறைந்து ஒலிப்பதால் குற்றியலுகரம் ஆயிற்று.

குறிப்பு: நெடில் தொடர் குற்றியலுகரம் அமைந்த சொல் நெடிலை உடைய இரண்டு எழுத்து சொல்லாக மட்டுமே வரும்.

### 4) வன்தொடர் குற்றியலுகரம்:

வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

எ.கா: பாக்கு, தச்சு, தட்டு, பத்து, உப்பு, புற்று

### 5) மென்தொடர்க் குற்றியலுகரம்:

மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

எ.கா: பாங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று

**6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்:**

இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

எ.கா: மூழ்கு, செய்து, சால்பு, சார்பு

"நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே"
நன்னூல் - 94

## குற்றியலிகரம்

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்
(குறுகிய ஓசையையுடைய இகரம்)

இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து அரை மாத்திரையாகக் குறைந்தொலிப்பது குற்றியலிகரமாகும்.

வீடு + யாது? = வீடியாது?

ஒரு குற்றியலுகரச் சொல்லின் (வீடு) முன் "யா" என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் (யாது) வந்து சேரும்போது, அக்குற்றியலுகரச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாக மாறும் (ட்+இ = டி) (வீடியாது) இதுவே குற்றியலுகரம் எனப்படும். இதற்குக் கால அளவு அரை மாத்திரை ஆகும்.

நிலைமொழியின் ஈற்றெழுத்து குற்றியலுகரமாக இருந்து வருமொழியின் முதலெழுத்து யகரமாக இருந்தால் அவையிரண்டும் புணரும்பொழுது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம் இகரமாகத் திரியும்.

மேலும் 'மியா' என்னும் அசைச்சொல் வருமொழியாக வந்தால் அதில் உள்ள இகரமும் (ம் + இ = மி) ஒலி குறைந்து குற்றியலுகரம் ஆகும்.

எ.கா:

கொக்கு + யாது = கொக்கியது?
எஃகு + யாது = எஃகுயாது?
உலகு + யாது = உலகுயாது?
கேள் + மியா = கேள்மியா?

"யகரம் வரக்குறள் 'உ'த்திரி இகரம்
அசைச்சொல் மியாவின் இகரமும் குரிய"
நன்னூல் - 93

## ஐகாரக்குறுக்கம்

ஐகாரம் + குறுக்கம் = ஐகாரக்குறுக்கம் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும், ஒரு மாத்திரையாகவும் ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் ஆகும்.

ஐ, வை, தை.

ஐகாரம் தனித்து ஒலிக்கும்போது இரண்டு மாத்திரை அளவில் ஒலிக்கின்றது.

ஐகாரம் மொழிக்கு முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வரும்போது, மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரையளவும், ஏனைய இடங்களில் ஒரு மாத்திரையளவும் ஒலிக்கும் ஐகாரம் இவ்வாறு குறைந்து ஒலிப்பதே ஐகாரக் குறுக்கம் ஆகும்.

ஐந்து ⇒ ஐகாரம் மொழிக்கு முதலில் = 1½ மாத்திரை

இளைஞர் ⇒ ஐகாரம் மொழிக்கு இடையில் = 1 மாத்திரை

புறவை ⇒ ஐகாரம் மொழிக்கு கடையில் = 1 மாத்திரை

## ஔகாரக் குறுக்கம்

ஔகாரம் + குறுக்கம் = ஔகாரக்குறுக்கம்

ஔகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் ஒலிப்பது ஔகாரக் குறுக்கும் ஆகும்.

ஔகாரம் தனித்த ஒலிக்கும் போது மட்டும் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும்.

மொழிக்கு முதலில் வரும்பொழுது ஒன்றரை மாத்திரை அளவே ஒலிக்கும். ஔகாரம் மொழிக்கு இடையிலும், கடையிலும் வராது.

எ.கா: ஔவை – மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரை

"தற் சுட் டள மொழி ஐம்மு வழியும்
நையும் ஔவும் முதல் அற்றாகும்"
நன்னூல் - 95

## மகரக்குறுக்கம்

மகரம் + குறுக்கம் = மகரக்குறுக்கம், 'ம்' என்னும் எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்தொலிப்பது மகரக்குறுக்கமாகும்.

செய்யுளில் போலும், மருளும் போன்ற சொற்களில் ஈற்றியல் எழுத்துகளிலுள்ள உகரங்கள் கெட்டுப் போல்ம், மருள்ம் என்றாகிப் போன்ம், மருண்ம் என்று திரியும். அவ்வாறு திரிந்த னகர, ணகரங்களின் முன் உள்ள மகரம் அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரை அளவே ஒலிக்கும்.

தரும் வளவன், வரும் வண்டி ஆகிய தொடர்களில் நிலை மொழியீற்றில் மகரமும் வருமொழி முதலில் வகரமும் உள்ளன. இதுபோல் நிலை மொழியீற்றில் மகரம் இருந்து வகர முதல் மொழியோடு புணரும் போது நிலை மொழியீற்றிலுள்ள மகரம் குறைந்து கால் மாத்திரையளவே ஒலிக்கும். இவ்வாறு குறைந்தொலிக்கும் குறுக்கம் மகரக் குறுக்கம் ஆகும்.

"ணன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்"

நன்னூல் - 96

### ஆய்தக்குறுக்கம்

ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம் ஆய்த எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்தொலிப்பது ஆய்தக்குறுக்கமாகும்.

எ.கா:

கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது

நிலைமொழியில் தனிக்குறிலைச் சார்ந்து வரும் லகர, ளகர மெய்கள் முன்னே, வருமொழி முதலில் தகரம் வந்தால் லகரத்திற்கு முன் வரும் தகரம் றகரமாகும். ளகரத்திற்கு முன் வரும் தகரம் டகரமாகும் போது அவ்வாறு திரிந்து றகர, டகரங்கள் புணரும்போது நிலைமொழி ஈற்றிலுள்ள லகர, ளகரங்கள் ஆய்த எழுத்தாகத் திரியும். இவ்வாறு திரிகின்ற ஆய்த எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இதற்கு ஆய்தக்குறுக்கம் என்று பெயர்.

### முற்றியலுகரம்

தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம் எனப்படும்.

1. பகு, பசு, படு, அது, தபு, பெறு = இவை தனிக்குறில் எழுத்தை அடுத்த வரும் வல்லின உகரம் பெற்ற முற்றியலுகரங்கள்.
2. காணு, உண்ணு, உறுமு = இவற்றின் ஈற்றிலுள்ள ண, மு உகரங்கள் முற்றியலுகரங்கள்
3. எழு, தள்ளு, கதவு = இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் முற்றியலுகரங்கள்.

## 2. சொல் இலக்கணம்

ஓரெழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் உணர்த்துமாயின் அவை சொல் எனப்படும்.

சொல்லின் அமைப்பு, வகைகள் பற்றியறிய இலக்கண முறைக்கு சொல் இலக்கணம் என்று பெயர்.

சொல், பதம், மொழி, கிளவி என்பவை ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களாகும்.

➢ **சொல்லின் வகைகள்:**

சொல் இலக்கணம் நான்கு வகையாக பிரிக்கப்படுகிறது.

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

இலக்கிய வகையால் நான்காகப் பிரிக்கப்படுகிறது.

1. இயற்சொல்
2. திரிச்சொல்
3. திசைசொல்
4. வடசொல்

➢ **இலக்கண வகைகள்**

**1. பெயர்ச்சொல்:**

பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் எனப்படுகிறது. பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர் (அ) குணப்பெயர்
6. தொழிற்பெயர்

**1. பொருட்பெயர்**

பொருட்களின் பெயரைக்குறிக்கும் சொல் பொருட்பெயர் எனப்படும்.

(எ.கா)

அழகன், குமரன், மலர்க்கொடி, தென்னை இவை உயிருள்ள பொருள்.

நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று இவை உயிரற்ற பொருள்கள் ஆகும்.

**2. இடப்பெயர்:**

இடங்களின் பெயரைக் குறிக்கும் சொல் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா)

வீடு, தெரு, பள்ளி, கோவில், மக்கள் வாழிடம், தோட்டம், காடு, இல்லம், குளம்

**3. காலப்பெயர்:**

காலத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா)

காலை, சித்திரை, தைத்திங்கள், கோடைக்காலம், செவ்வாய்க்கிழமை

**4. சினைப்பெயர்:**

உறுப்புகளைக் குறிக்கும் சொற்கள் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா)

தலை, கண், மூக்கு, வாய், செவி, நாக்கு, புல், வயது, கை, கால், விரல், வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி, விதை.

**5. பண்புப் பெயர் (அ) குணப்பெயர்:**

நிறம், வடிவம், சுவை, குணம் ஆகியவற்றுள் ஒன்றினைக் குறிக்கும் சொல் பண்புப்பெயர் எனப்படும்.

(எ.கா)

பத்துமீட்டர் துணி, பத்து கிலோ அரிசி, ஐந்துபடி எண்ணெய், வட்டப்பலகை, சதுரவீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணம் கூம்பு, செம்மை.

**6. தொழிற்பெயர்:**

தொழிலைக் குறிக்கும் பெயர்ச்சொல் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா)

ஆட்டம், விளையாட்டு, எழுதுதல், சிரித்தல்.

**தொழிற்பெயர்கள்**

- ஆக்கல் நீக்கல் விளையாட்டு
- பொறுத்தல் மறத்தல் பொறுத்தல்
- ஓரால் பொறை கண்ணோட்டம்
- செல்லாமை உரைத்தல் என்றல்
- காத்தல் ஈதல் மகிழ்ச்சி
- குற்றம் இழுக்கல் ஒழுக்கம்
- விடல் தெளிதல் கண்ணோட்டம்
- பணிதல் கற்றல் பெறுதல்
- வாழ்தல்
- நீங்காமை - எதிர்மறை தொழிற்பெயர்

**தொழிற்பெயர்**

- ஒழுக்கம் இழுக்கம் சொலல்
- இடும்பை படுபாக்கு ஒழுக்கம்
- இழுக்கம் இடும்பை ஒழுகல்
- ஒடுக்கம் வாழ்தல் இயற்றுதல்
- இருக்கை களவு வாழ்க்கை

- ஒழுக்கம் துளங்குதல் பகை கொளல்
- விடல் ஒழுகுதல் தலை ஆற்றுதல்
- ஒழுகுதல் நோன்றல் பொறுத்தல்
- தொடர் (தொடர்பு) - முதனிலைத் தொழிற்பெயர்
- குத்து - முதல் நிலைத் தொழிற்பெயர்

| வ.எண். | பெயர் வகை | பெயர் |
|---|---|---|
| 1 | பொருட்பெயர் | கண்ணன், நாற்காலி |
| 2 | இடப்பெயர் | வேலூர், நாமக்கல் |
| 3 | காலப்பெயர் | தைத்திங்கள், நண்பகல் |
| 4 | சினைப்பெயர் | முகம், கை |
| 5 | குணப்பெயர் | வட்டம், அழகு |
| 6 | தொழிற்பெயர் | ஆடல், பாடல் |

## தொகை நிலைத்தொடர்கள்

தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை:

1. வேற்றுமைத் தொகை
2. வினைத் தொகை
3. பண்புத் தொகை
4. உவமைத் தொகை
5. உம்மைத் தொகை
6. அன்மொழித் தொகை

### 1. வேற்றுமைத் தொகை

ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

எ.கா: கண்ணன் இராமன் பார்த்தான்

இத்தொடரில் கண்ணனை இராமன் பார்த்தான் என விரிந்து நின்று பொருள் உணர்த்துகின்றது. இரு சொற்களுக்கு இடையில் ‘ஐ’ என்னும் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருளை உணர்த்துவதால் இது வேற்றுமைத் தொகை எனப்படும்.

- ➢ வேற்றுமைத் தொகை எட்டு வகைப்படும். அவை

ை. முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை எனப்படும்.

ைை. 2 ஆம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள் வேற்றுமை எனப்படும்.

ைைை. 3 ஆம் வேற்றுமை அல்லது கருவி வேற்றுமை எனப்படும்.

ளை. 4 ஆம் வேற்றுமை அல்லது கொடை வேற்றுமை எனப்படும்.

எ. 5 ஆம் வேற்றுமை அல்லது நீக்க வேற்றுமை எனப்படும்.

எை. 6 ஆம் வேற்றுமை அல்லது கிழமை வேற்றுமை எனப்படும்.

எைை. 7 ஆம் வேற்றுமை அல்லது இடவேற்றுமை எனப்படும்.

எைைை. 8 ஆம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை எனப்படும்.

வேற்றுமையும் அதன் உருபுகளும்

| வ.எ | வேற்றுமை | உருபுகள் | பொருள் |
|---|---|---|---|
| 1 | முதல் வேற்றுமை | இயல்பு | ------------ |
| 2 | இரண்டாம் வேற்றுமை | ஐ | ஆக்கல், அழித்தல், அமைதல், நீத்தல், ஏத்தல், உடைமை |
| 3 | மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| 4 | நான்காம் வேற்றுமை | கு | கோடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை |
| 5 | ஐந்தாம் வேற்றுமை | இல், இன் | நீக்கள், ஒப்பு, எல்லை, ஏது |
| 6 | ஆறாம் வேற்றுமை | அது, ஆது | பண்பு, உறுப்பு, ஒன்றன், கூட்டம், பலவின், நீட்டம் |
| 7 | ஏழாம் | இல், கண் | பொருள் முதலிய |

| | | | |
|---|---|---|---|
| | வேற்றுமை | | ஆறும் தற்கிழமை, பிறகிழமை இரண்டிற்கும் கடனாதலாம். |
| 8 | எட்டாம் வேற்றுமை | ---------- | விளித்தல் பொருளில் வரும் (விளித்தல் அழைத்தல்) |

எ.கா

| வ. எ | வேற்றுமைத்தொகை | உருபு | தொகா நிலை |
|---|---|---|---|
| 1 | பால் பருகினான் | ஐ (2) | பாலை பருகினான் |
| 2 | தலை வணங்கினான் | ஆல் (3) | தலையால் வணங்கினான் |
| 3 | வேலன் மகன் | கு (4) | வேலனுக்கு மகன் |
| 4 | ஊர் நீங்கினான் | இன் (5) | ஊரின் நீங்கினான் |
| 5 | செங்குட்டுவன் சட்டை | அது (6) | செங்குட்டுவனது சட்டை |
| 6 | குகைப்புலி | கண் (7) (அ) இல் | குகையில் புலி |

**வேற்றுமைத்தொகை**

- ஆய்தொடி நல்லாய் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- மாறன்களிறு - ஆறாம் வேற்றுமைத் தொகை
- தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை

**வேற்றுமைத்தொகை**

- **இரண்டாம் வேற்றுமைத்தொகை**
  நூல் நோக்கி உயிர்செகுத்து
  கோல்நோக்கி திறனறிந்து
  பகைகொளல்(பகையைக்கொளல் கால்மடித்து
  இருளறுக்கும்(இருளை அறுக்கும்) வால்குழைத்து
  செவியறுத்து(செவியை+அறுத்து) பூதி சாத்த
  அறனறிந்து(அறத்தை+அறிந்து) பெருமையறிந்து
  திறனறிந்து(திறனை + அறிந்து) அறனீனும்

- **இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**
  - தார்வேந்தன் (தாரை அணிந்த அரசன்)
  - நீர்த்தடம்,
  - போர்க்குகன்,
  - கவையடிக்கேழல்
  - வரி உழுவை (வரிகளைக் கொண்ட புலி)
  - வள்ளுகிர்ப்புலி (கூர்மையான நகத்தை உடைய புலி)
  - நீர்முகில்,
  - கொலைப்புலி (கொலையை விரும்பும் புலி)
  - திரைக்கங்கை (அலைகளை உடைய கங்கை)
  - கழற்கால்,
  - வெறித்தழை,
  - உகிர்க்குருளை,
  - வளைக்கை (வளையை உடைய கை),
  - இலைப்பொழில் (இலையை உடைய பொழில்),
  - கவின்மலர்,
  - மறைநபி
  - புரைபல்,
  - துளைப்பல்,
  - வளைக்கரங்கள்
  - வரைக்கலிங்கம்,
  - கடற்லிங்கம்,
  - கடகரி,
  - முத்துக்கொண்டை (முத்துகளைக் கொண்ட கொண்டை),
  - புனலருவி

- ❖ தாள்தலை (தாளைத் தலையால்) - இரண்டாம் வேற்றுமைத்தொகை
- ❖ நா காக்க, கதம் காத்து, இகல் வெல்லும் - இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்
- ❖ களம் கண்டோம் - இரண்டாம் வேற்றுமைத்தொகை

❖ அருள்பொழி (அருளைப் பொழிகின்ற) - இரண்டாம் வேற்றுமைத் தொகை

❖ ஊன்பொதி உகிர் (ஊனால் பொதிந்திருந்த) - மூன்றாம் வேற்றுமைத்தொகை

❖ சொல் இழுக்கு, பொருட்பயன் - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகைகள்

❖ வாள்வாய் அரிந்து (வாளின் வாயால் அரிந்து), பொன்பத்தர் (பொன்னால் ஆகிய பத்தர்) - மூன்றாம் வேற்றுமைத் தொகைகள்

❖ காகிதப்பூ - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

❖ கணிகை சிறுவன் (கணிகைக்குச் சிறுவன்), இசை தோற்று (இசைக்குத் தோற்று) – நான்காம் வேற்றுமைத்தொகைகள்

❖ குடிநீர் (குடிப்பதற்குப் பயன்படும் நீர்) – நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

❖ நின்கேள் - நான்காம் வேற்றுமைத்தொகை

❖ பகல்பூக்கள் (பகலில் பூக்கும் பூக்கள்) – ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

❖ வான்மழை (வானிலிருந்து வீழும் மழை) – ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

❖ பழச்சுவை, உயிர்த்திரள், ஐயைதாள், நீர்வளம், நின்பதம் - ஆறாம் வேற்றுமைத்தொகைகள்

❖ பிணவுப்பசி – ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்

❖ சிலைத்தொழல் (சிலையினது தொழில்) – ஆறாம் வேற்றுமை தொகை

❖ நீரோசை – ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ சிலைநாண் (சிலையினது நாண்), ஆனைமணி (ஆனையினது மணி), அபயன் அடி (அபயனது அடி) – ஆறாம் வேற்றுமை தொகைகள்

❖ விரல்சுவை – ஆறாம் வேற்றுமைத் தொகை

❖ பேய்க்கணங்கள் - ஆறாம் வேற்றுமைத் தொகை

❖ மழைவரவால் (மழையினது வரவால்) – ஆறாம் வேற்றுமைத் தொகை

❖ உள்;ர் (ஊர்உள்), நுனிக்கொம்பர் (கொம்பர் நுனி) – முன்பின்னாகத் தொக்க நின்ற ஆறாம் வேற்றுமைத் தொகைகள்

❖ என்கால், என்பெயர், நின்னகர், என்பதி – ஆறாம் வேற்றுமைத் தொகைகள்

❖ என்னுயிர் - ஆறாம் வேற்றுமைத் தொகை

❖ கார்குலாம் (காரது குலாம்) – ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ வழிக்கரை – ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ பணிவிடம் - ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ தன்ஒன்னார் , வேந்தன் பொருள் - ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ செறுநர் செருக்கு – ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ நதிப்பரப்பு – ஆறாம் வேற்றுமைத்தொகை

❖ குன்றேறி – ஏழாம் வேற்றுமைத்தொகை

❖ செவிபுக – ஏழாம் வேற்றுமைத்தொகை

❖ மலைமுழை – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

❖ போர்க்குறி – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

❖ அரைக்கலிங்கம் (அரையின்கண் உள்ள கலிங்கம்), அடிப்பாணர் (அடியின்கண் வாழ்கின்ற பாணர்) – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

❖ பண்ணைமடவார், கானப்பறவை – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

❖ தேவா – விளி

❖ ஊர (ஊரனே) – விளித்தொடர்

**<u>இரண்டாம் வேற்றுமைத்தொகை</u>**

- அடிதொழுது காலமடித்து
- உரம் பிளந்து கேசரி நிகர் முகம்மது

- வால் குலைத்து நூல் நோக்கி
- ஆறணியும் செவியறுத்து
- அறன் அறிதல் இருள் அறுக்கும்
- அறன் ஈனும் திறன் அறிந்து
- இன்பமும் ஈனும்
  செருக்குஅறுக்கும்
- இகல் வெல்லும் (இகலை வெல்லும்)
- உயிர்வெளவல் கோல்நோக்கி
- புகழ்பெற்ற பலனடைந்தாய்
- மாசை எற்றி இரண்டாம் வேற்றுமை விரி
- செவிச்செல்வம், வாயுணர்வு, செவியின்சுவை மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- தன் செய்வினை - மூன்றாம் வேற்றுமைத்தொகை (தன்னால் செய்யப்பட்ட வினை)
- அன்பின் குழவி - மூன்றாம் வேற்றுமைத்தொகை (அன்பினால் ஈனப்பட்ட குழவி)
- தற்பிறர் (தனக்குப் பிறர்) – நான்காம் வேற்றுமைத்தொகை
- நின்கேள் - நான்காம் வேற்றுமைத்தொகை
- அதனின் கூரியது – ஐந்தாம் வேற்றுமை உருபு
  ஒப்புப் பொருளில் வந்தது.
- கௌலின்('இன்') – ஐந்தாம் வேற்றுமை உருபு
  உறழ்வுப் பொருளில் வந்தது.

**ஆறாம் வேற்றுமைத்தொகைகளுக்கான எடுத்துக்காட்டுகள்**

- குணநலம் தன்மணம் செருநர் செருக்கு
  நதிப்பரப்பு கங்கைத்துறை என்னுயிர்
  நும்பேர் என் கால் என் பெயர்
  நின்னகர் என் பதி
- வினைப்பயன் (வினையினது பயன்)
- தமிழொளி (தமிழினது ஒளி)
- அறிவுடையார் கேண்மை
- பகல்வெல்லும் - ஏழாம் வேற்றுமைத்தொகை (பகலில் வெல்லும்)
- இலான்கண் - ஏழாம் வேற்றுமை உருபுக
- உடையான்கண் - ஏழாம் வேற்றுமை உருபுக
- செவிபுக - ஏழாம் வேற்றுமை உருபுக
- நகரத்தில் இடர்ப்படோம் - ஏழாம் வேற்றுமை விரி
- நரகத்தில் இடர்ப்படோம் - ஏழாம் வேற்றுமை விரி
- தார்வேந்தன் - இரண்டாம் வேற்றுமை உருபும்
  பயனும் உடன்தொக்க தொகை
- போர்க்குகள் - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- திரைக்கங்கை - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- கோதைவில் - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- நீர்த்தடம் - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- சீதப்பந்தர் - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- வரி உழுவை - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- மதகரி - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- கவையடி - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்

- பெருவரி வேங்கை - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- வள்ளுகிர்ப் புலி - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- கொலைப்புலி - இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- தோல் செருப்பு - மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- தெறுபொருள் (தெறுதலால் பெறும் பொருள்) - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
- கடல்நிலம் - மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
- வேந்தன் பொருள் (வேந்தனுக்குரியபொருள்) - நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
- ஊர – அண்மை விளி
- ஐய, செல்வ – அண்மை விளிகள்

**வேற்றுமைத்தொகை**

1. அடி வாழ்த்துவம் (அடியை வாழ்த்துவம்) - இரண்டாம் வேற்றுமைத் தொகை
2. சிறைப்பறவை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
3. புல்லார் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
4. முள்ளிலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
5. வேற்காளை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
6. வாள்வேந்தன், வளைக்கை, வளைத்தோளி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
7. படைப்பரசுராமன், மதிக்குஞ்சி, காய்க்குலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
8. சுவடிச்சாலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
9. முட்புதர் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
10. நீதிநூல் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
11. மலர்ச்சோலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
12. கவிபுனைந்தோம், இரைதேர் - இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்
13. தலைகுனிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை
14. தற்சூழ - இரண்டாம் வேற்றுமைத்தொகை
15. பொலம்புனை - மூன்றாம் வேற்றுமைத்தொகை
16. கைதாங்கி - மூன்றாம் வேற்றுமைத்தொகை
17. பொற்சிலம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
18. தற்பிறர் - நான்காம் வேற்றுமைத்தொகை
19. கன்னிபாலன் - நான்காம் வேற்றுமைத்தொகை
20. என் மகன் - நான்காம் வேற்றுமைத்தொகை
21. வினைத்திட்பம் (வினைக்கு வேண்டிய மனவுறுதி – நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை (வினைசெய்தலின்கண் திண்மை) – ஏழாம் வேற்றுமைத்தொகை
22. மாலைமதி – ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
23. பதத்துணை (பதத்தின் துணை) – ஐந்தாம் வேற்றுமைத்தொகை
24. மால் கழல், தாபதர் உள்ளம் - ஆறாம் வேற்றுமைத்தொகைகள்
25. கள்ளிப்புதர் - ஆறாம் வேற்றுமைத்தொகை
26. நீருற்று – ஆறாம் வேற்றுமைத்தொகை
27. கன்றுகுரல் - ஆறாம் வேற்றுமைத்தொகை
28. புல்நுனி – ஆறாம் வேற்றுமைத்தொகை
29. கயன்முள் - ஆறாம் வேற்றுமைத்தொகை
30. இறவுப்புறம், கறவுக்கோடு, களிற்று மருப்பு – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்
31. தினைத்துணை, பனைத்துணை, மனத்திட்பம், அறிவார் தொழில் - ஆறாம் வேற்றுமைத்தொகைகள்
32. தென்னவன் கொற்றம், மன்னவன் கூடல் - ஆறாம் வேற்றமைத்தொகைகள்

33. கைவயம், மெய்வயம் - ஆறாம் வேற்றுமைத்தொகைகள்
34. சொற்பதம் (சொல்லினதுவழி) – ஆறாம் வேற்றுமைத்தொகை
35. பகலுறை – ஏழாம் வேற்றுமைத்தொகைகள்
36. கையேந்தி, ஊரிருந்து – ஏழாம் வேற்றுமைத்தொகைகள்
37. போர் முரசம், வேங்கடமாயவன் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்
38. காற்சிலம்பு – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

➢ உருபும் பயனும் உடன் தொக்க தொகையும்:
ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

எ.கா: தேர்ப்பாகன்

இத்தொடர் தேரை ஓட்டும் பாகன் என விரிந்து பொருளை உணர்த்துகின்றது. கொடுக்கப்பட்டுள்ள தேர், பாகன் என்னும் சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் "ஓட்டும்" என்னும் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன. எனவே இது உருபும் பயனும் உடன்தொக்க தொகை எனப்படும்.

எ.கா:

| | |
|---|---|
| 1. தேர்பாகன் (தேரை ஓட்டும் பாகன்)<br>2. நீர்க்குடம் (நீரை உடைய குடம்) | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும் |
| 1. பொன் வளையல் (பொன்னாலான வளையல்)<br>2. மட்பானை (மண்ணால் ஆன பானை) | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |

➢ நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும்
1. தலைவலி மருந்து (தலைவலிக்குத் தரும் மருந்து)
2. கூலி வேலை (கூலிக்குத் தரும் வேலை)

➢ ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையும்
1. குழாய்த் தண்ணீர் (குழாயிலிருந்து கிடைக்கும் தண்ணீர்)
2. தொட்டி தண்ணீர் (தொட்டியில் கிடைக்கும் தண்ணீர்)

## வினைத் தொகை

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் 'வினைத்தொகை' எனப்படும் காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகை ஆகும்.

வினைப்பகுதியும் அடுத்த பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே வினைத்தொகை அமையும்.

எ.கா: உண்கலம்

இவற்றில் 'உண்' என்பவை வினைப்பகுதிகள். அவை முறையே கலம் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து பெயரெச்சங்களாயின.

மேலும் இவை உண்டகலம், உண்கின்ற கலம், உண்ணும் கலம் என முக்காலத்திற்கும் பொருந்தும் படி விரிந்து பொருள் தருகின்ற காலம்.

காலம் காட்டும் இடைநிலைகள் இப்பெயரெச்சங்களில் தொக்கி இருக்கின்றன.

மேலும் சில எ.கா:

1) ஆடுகொடி 2) பாய்புலி 3) அலைகடல்
4) ஊறுகாய் 5) விரிகடல் 6) குடிநீர்
7) குளிர்மழை 8) ஒடுங்குளிர் 9) சுடுசோறு
10) பயில்தோறும்

வினைத்தொகை

- புனைமலர் வாங்குவில் உயர்துலை
- செய்தவம் வீழ்கதிர் ஆழ்நரகு

**வினைத்தொகை**

- உகுநீர் சூழ்கழல் செய்கொல்லன்

- செய்வினை பொங்குகடல் ஈன்குழவி
- பொழிதருமணி பணைதருபருமணி
- வருபுனல் நிதிதருகவிகை

**வினைத்தொகை**

- பொருநகர் எழுகுருதி
- வார்கண் உகுநீர்
- சூழ்கழல் செய்கொல்லன்
- முரிதிரை செய்வினை
- தீர்சவம் பொங்குகடல்
- வீழ்மகன் நிறைதிருநீறு
- சோர்வடிவு திகழ்பா
- ஈன் குழவி உறுபொருள்
- கொய்ம்மலர் எறிநதி

**வினைத்தொகை**

- உரைகாலம், மருவுசெய், அகல்வாயல்,
- அறுகுளம், ஓங்குமலை, நீளிடை,
- ஆகாறு, போகாறு,
- ஆரிருள், (ஆர் + இருள்)
- கடனறிகாட்சியவர், பெய்சாகாடு, பொருநகர்,
- வழங்குநெறி, விடுகணை, விரிமலர்,
- கொள்பாடல், வடிநுனை, விளங்கொளி,
- அடுதிரை, உகுகொடி, திருந்துதார்,
- படுவிடம், திகழ்சிரம், சூழ்நகம்,
- மின்னுசெங்கதிர், புகழுடம்பு, இகழ்உடம்பு
- பாயுநாள், பருகுநாள், புதுக்குநாள்
- பழகுபாட்டு, மடிகளம், பொழிதிருமுகம்
- சேர்மதி, கொய்ம்மலர், ஓங்குநீர்

**வினைத்தொகை**

- திருந்துமொழி, பொருந்துமொழி
- திரைகவுள் உயர்சினை
- ஒழுகுநீர் உருள்தேர்
- ஈர்வளை படுகாலை
- உண்கண் துஞ்சுமார்பம்,
- நிறைமதி, திருந்தடி,
- ஆயிழை அகல்முகில்
- படர்முகில், விழைசெயம்
- பொழிகரி, பொழிமறை
- கிளர்திறம் செய்குன்று
- ஆடரங்கு, உயரண்டம்
- தாழ்பிறப்பு, தேர்குயில்
- வேங்கடம் வளர்கூடல் (வேம் + கடம்)
- துஞ்சுமுகில், உறைவேங்கடம்
- கழிவெள்ளம் படர்முகில்
- சுடரொளி உயர் எண்ணம்
- உயர்மரம், முதிர்மரம் தொடுவானம்
- பொங்குதாமரை
- உண்கண் தெய்வம் உற்றாள் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

## பண்புத்தொகை

பண்புப்பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே 'மை' என்னும் பண்பு விகுதியும் 'ஆகிய' 'ஆன' என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

எ.கா:

வெண்ணிலவு - வெண்மையான நிலவு
வட்டக்கல் - வட்டமான கல்
இன்சொல் - இனிமையான சொல்

இத்தொடர்களில் வெண்மை, வட்டம், இனிமை என்பன பண்புப்பெயர் பெயர்கள் நிலவு, கல், சொல் என்பன பெயரைத் தழுவி நிற்கும் பெயர்ச்சொற்கள் இவ்விரண்டிற் கிடையில் ஆகிய, ஆன என்னும் பண்பு, மை என்னும் பண்பு விகுதியும் மறைந்து வந்துள்ளதால் பண்புத்தொகை ஆகும்.

- பண்புத்தொகயையின் வகைகள்:

1. வண்ணப் பண்புத்தொகை

நிறத்தைக் குறிக்கும் பண்புத்தொகை வண்ணப் பண்புத் தொகையாகும்.

எ.கா:

செங்கல்- செம்மையாகிய கல்

கருங்குவளை – கருமையான குவளை

2. வடிவுப் பண்புத்தொகை

வடிவத்தைக் குறிக்கும் பண்புத்தொகை வடிவுப் பண்புத்தொகையாகும்.

எ.கா:

வட்டப்பாறை – வட்டமான பாறை

வட்டத்தட்டு – வட்டமான தட்டு

3. அளவுப் பண்புத்தொகை

அளவைக் குறிக்கும் பண்புத்தொகை அளவுப்பண்புத் தொகையாகும்.

எ.கா:

முத்தமிழ் - மூன்று + தமிழ் = மும்மையாகிய தமிழ்

4. சுவைப் பண்புத்தொகை:

சுவையைக் குறிக்கும் பண்புத்தொகை

எ.கா: உவர்நீர் - உவர்ப்பான நீர்

5. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

சிறப்புப் பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வருவது இருபெயரெட்டுப் பண்புத்தொகையாகும்.

எ.கா: மல்லிகைப் பூ

இத்தொடர் மல்லிகையாகிய பூ என விரிகிறது. பூ என்பது அனைத்து பூக்களும் சுட்டும் பெயராகவும், மல்லிகை என்பது பல பூக்களுள் ஒன்றாகிய பூவை குறிப்பாகச் சுட்டவதால் சிறப்புப் பெயராகும். இவ்விரு சொற்களுக்கும் இடையே "ஆகிய" என்னும் பண்பு உருபு மறைந்து வந்துள்ளதால் இது இருப்பெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

மேலும் சில எ.கா:

1. பனைமரம் 2. புளிச்சைக்கீரை 3. பெண்மைநலம்

4. செருக்களம் 5. அவைக்களம் 6. உரைகல்

பண்புத்தொகைகள்:

| | | |
|---|---|---|
| இன்மை | திண்மை | நீலமுடி |
| நன்செய் | புன்செய் | தொல்லுலகு |
| வெண்குடை | கருங்கோல் | பெருந்தேன் |
| செந்தீ | வெம்மை | நெடுமதில் |
| செந்நாய் | கருமுகில் | வெண்மதி |
| அருந்தவர் | நல்வினை | பெரும்பேறு |
| பல்லுயிர் | நல்வினை | தீவினை |
| பேரின்பம் | கடுஞ்சொல் | நல்லறம் |
| செம்பொன் | பழந்தமிழ் | சிற்றினம் |
| பெருங்குணம் | செங்கை | சேவடி |
| வெவ்விருப்பு | வன்மறவோர் | |

**பண்புத்தொகை**

- நீலமுடி சிற்றினம் தீயொழுக்கம்
- நல்லறம், நன்மொழி நல்லடி
- இருநிலம் இன்தமிழ்
- அவியுணவு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**பண்பாகு பெயர்**

- விருந்து - பண்பாகுபெயர்

**பண்புத்தொகை**

- ✘ வன்மை நல்லொழுக்கம் தீயொழுக்கம்
- ✘ அருவினை புன்கண் பெரும்பெயர்
- ✘ அரும்பெறல் பெருங்குடி கடுங்கோல்
- ✘ செங்கோலன் நன்மொழி செந்தமிழ்
- ✘ பெருஞ்சிரம் தண்டளி திண்டிறல்
- ✘ நெடுநாவாய் நெடுநாவாய் நெடுநீர்
- ✘ நன்னுதல் புன்கண் மென்கண்
- ✘ அருவிலை நன்கலம் நற்கறிகள்
- ✘ இன்னமுதம் ஒண்பொருள் எண்பொருள்
- ✘ நற்சங்கு வெண்குழை நெடுநீர்
- ✘ வெள்ளெயிறு பெருங்கிரி செங்கதிர்

பெருவரி

**பண்புத்தொகை:**

- குடிமை நற்சங்கு வெண்குழை
- சேவடி நல்லோர் இளங்கனி
- பசுந்துணி புன்கண் அரும்பெறல்
- பெருங்குடி கடுங்கோல் செங்கோலன்
- நன்மொழி செந்தமிழ் தண்ணீர்
- புன்கண் மென்கண் நெடுநீர்
- வெள்ளெயிறு பெருங்கிரி செங்கதிர்
- பெருவரி பெருஞ்சிரம் திண்டிறல்
- தண்தளிர் நெடுவநாவாய் நெடுவாய்
- நெடுநீர் நன்னுதல்
- அருவினை(அருமை + வினை) – பண்புத்தொகை
- ஒண்பொருள் (ஒண்மை + பொருள்) – பண்புத்தொகை

**<u>இருபெயரொட்டுப் பண்புத்தொகை</u>**

- மறைதல் கல்மிதப்பு தமிழ்நூல்
- இலக்கணநூல் வாழைக்கனி உல்குபொருள்
- கரித்திரள் அவியுணவு
- பெருந்தண்ணீர் - பண்புத்தொகை அடுக்கு
- ஒள்ளிழை (ஒண்மை + இழை) – பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைகள்
- மடமொழி (மடமை+மொழி) - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைகள்

**பண்புத்தொகைகள்**

- ஆரமிர்து, தொன்மக்கள், பழந்தமிழ்
- நற்பயன், இருநிலம், குறுநகை
- பைந்நிறம், நன்மனை தொல்கவின்
- வெண்மருப்பு பசும்பொன் கருங்கொடி
- ஒண்பொன் இருங்கடல் நெடுங்கண்
- செவ்வாய் இன்நரம்பு திண்டேர்
- இன்யாழ் பைந்தார் நல்யாழ்
- இருநிலம் இருவிசும்பு அருநலம்
- பைம்பொன் இளமயில் தீந்தொடை
- இன்னிசை குறுவளை நெடும்புடை
- அருமறை செழுந்துயில் கொடுங்கண்
- வெவ்வாய் சிறுபொறி மென்மலர்
- வல்லுடல் செம்மலர் செழும்புகழ்
- வெவ்விடம் செங்கதிர் கொடுவிடம்
- வெந்தழல் செந்தழல் எழுகலிங்கம்
- வெஞ்சிலை வன்தூறு பெருங்கடல்
- மெல்லிதழ் ஒண்பதம் மென்குரல்
- நுண்துளி சிறுதொட்டில் செங்கீரை
- அருந்தவம் ஆரமுது வன்கானகம்
- வன்காயம் அருந்தமிழ் பெருந்தமிழ்
- தண்கடல் செங்கதிர் புல்லடிமை
- வெண்முல்லை தீச்சொல் பேரறிவாளன்
- இல்பருவம் அருவினை வெண்குழை

- சேவடி முதுசுருதி பெருங்குணம்
- ஒருமனம் முப்பகை அரிவடிவு
- வாட்படை (வாளாகிய படை) - இருபெயரெட்டுப் பண்புத்தொகை
- சீர்மை – பண்புப்பெயர்

**பண்புத்தொகை**

- நல்லுரை, நெடுந்தகை, தண்குடை
- செங்கோல் செங்கதிரோன் முதுமரம்
- தண்பதம் நல்லகம் அருந்துயர்
- நெடுந்தேர் பேரிஞ்சி முதுமுரசம்
- சிற்றன்னை சேவடி முச்சங்கம்
- நற்றாய் பெருந்தெய்வம் வெண்தயிர்
- செந்நெல் செழும்பொன் பெரும்பூதம்
- கருஞ்சிகரம் செந்தமிழ் பேரறிவு
- வெறுங்கை கருங்கல் பழ ஆவணம்
- தீநெறி கடும்பகை முக்குடை
- கருமுகில் வெஞ்சுடர் பேரிடி
- பேரறிவு கேண்மை தூய்மை
- சால்பு பெருங்களிறு நன்மான்
- நெடுந்தேர் பசுங்கால கருங்காக்கை
- பச்சூன் பைந்நிணம் வெஞ்சினம்
- கடுந்திறல் நல்லாறு கூர்ம்படை
- எழுபிறப்பு எண்பொருள் நுண்பொருள்
- பெருந்தேர்

1. நன்னெடும்படை (நன்மை + நெடுமை + படை) - இருமுறை அடுக்கிவந்த பண்புத்தொகை
2. இளமைப்பருவம், தமிழன்னை - இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள்
3. கணிச்சிக் கூர்ம்படை - இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள்
4. மெய்ப்பொருள், சுவர்க்கபதி - இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள்
5. அன்புநெறி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
6. உதவிநயன் (உதவியாகிய நயன்) - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
7. அஞ்சிலோதியை வர – பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை

## உவமைத்தொகை

உவமைக்கும், உவமேயத்திற்கும் (பொருளுக்கும்) இடையில் போல, போன்ற, நிகர அன்ன என்னும் உவம உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத் தொகையாகும்.

எ.கா:

தேன் போன்ற மொழி எனப்பொருள் தருகிறது.

தேன் - உவமை மொழி – உவமேயம் (பொருள்)

இடையில் 'போன்ற' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளதால் இது உவமைத்தொகையாகும்.

மேலும் சில எ.கா:

1. முத்துபல் 2. மதிமுகம் 3. அமுதுமொழி 4. பவளவாய்

**உவமைத்தொகை**

- இலைவேல் - உவமைத்தொகை
- தளிர்க்கை - உவமைத்தொகை
- கனிவாய் - உவமைத்தொகை

**உவமைத்தொகை**

- கல்திரள்தோள் - உவமைத்தொகை
- தாமரை நயனம் - உவமைத்தொகை
- மலர்ச்சேவடி - உவமைத்தொகை
- பூதரப்புயம் - உவமைத்தொகை

- மலரடி - உவமைத்தொகை

**உவமைத்தொகை**

1. பனைக்கை - உவமைத்தொகை
2. பூதரப்புயம் - உவமைத்தொகை
3. மலரடி - உவமைத்தொகை
4. மலர்ச்சேவடி - உவமைத்தொகை
5. கல்திரள் - உவமைத்தொகை
6. தாமரை நயனம் - உவமைத்தொகை
7. தேமொழி உரைத்தது - உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை

**உவமைத்தொகைகள்**

1. வேற்கண், கயனெடுங்கண், மணி எயிறு, பவளச்செவ்வாய், எரிமலர் - உவமைத்தொகைகள்
2. பாவை போல (பாவை போன்றவளாகிய தத்தை) காளை (காளை போன்றவனாகிய சீவகன்), உகு கொடியே (கொடி போன்ற வீணாகிபதி) – உவமையாகு பெயர்கள்.
3. மலர்க்கால் - உவமைத்தொகை
4. பொன்னிமை – (பொன் போன்ற இமை) – உவமைத்தொகை
5. மதிமுகம், மலர்த்தாள் - உவமைத்தொகைகள்

**உவமைத்தொகை**

1. மதிக்குடை – உவமைத்தொகை
2. தாமரைக்கண் - உவமைத்தொகை

## உம்மைத்தொகை

இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது 'உம்மைத்தொகை' எனப்படும்.
எ.கா:

ஆண் + பெண் - ஆணும் பெண்ணும்
இரவு + பகல் - இரவும் பகலும்
ஆடு + மாடு – ஆடும் மாடும்

**உம்மை**

- யாமத்தும் பகலும் - 'உம்' மை எண்ணும்மை
- கல்லா ஒருவற்கும் - 'உம்' மை இழிவு சிறப்பும்மை
- வயிற்றுக்கும் - உம்மை இழிவு சிறப்பும்மை
- யாவையும் - உம்மை முற்றும்மை
- நாடுநகர் - உம்மைத்தொகை
- அடவிமலை ஆறு - உம்மைத்தொகைகள்
- அரவுநீர் - உம்மைத்தொகை
- மாடும் ஆடும் - எண்ணும்மை
- தேவியும் ஆயமும் - எண்ணும்மை
- அவியினும் வாழினும் - எண்ணும்மை
- கற்றிலனாயினும் பிழைத்துணர்ந்தும் - எதிர்மறை உம்மைகள்
- யாவையும் - முற்றும்மை
- செய்யினும் - 'உம்' மை இழிவு சிறப்பும்மை

**உம்மைத்தொகை**

1. பிள்ளைப்பாண்டியன் வில்லி ஒட்டக்கூத்தன் - உம்மைத்தொகை
2. சிரமுகம் - உம்மைத்தொகை
3. தாய்தந்தை - உம்மைத்தொகை

**உம்மைத்தொகை**

1. காலமும் தேசமும் - உம்மைத்தொகை
2. மலையினும் - உம்மைத்தொகை
3. எல்லார்க்கும், எழுமையும் - 'உம்'மை முற்றுமைகள்
4. சாகாடும் - உம்மை உயர்வு சிறப்பும்டை
5. தானதர்மம் - உம்மைத்தொகை
6. எல்லோரும் - 'உம்'மை முற்றுமை
7. குடிகளும் மொழிகளும் இனங்களும் - எண்ணும்மை
8. உலகனைத்தும், யாவரும் - முற்றும்மைகள்
9. மெல்விரலும் நடவா – உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை

**உம்மைத்தொகை**

1. நாழிகை வாரம், அந்திகாலை – உம்மைத்தொகைகள்
2. சட்டதிட்டம் - உம்மைத்தொகை
3. வெய்யோன், திங்கள் - உம்மைத்தொகை
4. நான் அவன் (நானும் அவனும்) – உம்மைத்தொகை

என விரிந்து பொருளை உணர்த்துகின்றன இடையிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருளை உணர்த்துவதால் இது உம்மைத்தொகையாகும்.

உம்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

- **எண்ணல் உம்மைத்தொகை**
  வெற்றிலைபாக்கு – வெற்றிலையும் பாக்கும்
- **எடுத்தல் உம்மைத்தொகை**
  இரண்டுகிலோ - இரண்டு கிலோவும்
  நூறு கிராம் - நூறு கிராம்
- **முகத்தல் உம்மைத்தொகை**
  ஒன்றே கால் லிட்டர் - ஒரு லிட்டரும் கால் லிட்டரும்
- **நீட்டல் உம்மைத்தொகை**
  ஐந்தடி ஆறு அங்குலம் - ஐந்து அடியும், ஆறு அங்குலமும்.

குறிப்பு:

'உம்' என்னும் இடைச்சொல் வெளிப்பட்டே வருமானால் அது 'எண்ணும்மை' என்று அழைக்கப்படுகிறது.

எ.கா: 1. இரவும் பகலும் 2. ஆணும் பெண்ணும்
3. நீயும் நானும்

**எண்ணும்மை**

- மாடும் ஆடும் - எண்ணும்மை
- அன்பும் ஆர்வமும் அடக்கமும் - எண்ணும்மை
- தேவியும் ஆயமும் - எண்ணும்மை
- கருமுகிலும் வெண்மதியும் - எண்ணும்மை
- அவியினும் வாழினும் - எண்ணும்மை
- பாலடையும் நறுநெய்யும் தேனும் - எண்ணும்மை
- தாளமும் மேளமும் - எண்ணும்மை

**எண்ணும்மை**

1. தேனும் மீனும் - எண்ணும்மைகள்
2. நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் - 'உம்'மை எண்ணும்மைகள்
3. தாயாரும் தந்தையாரும் - எண்ணும்மைகள்
4. உறுபொருளும் உல்குபொருளும் - எண்ணும்மைகள் தெறுபொருளும்
5. அருளொடும் அன்பொடும் - எண்ணும்மைகள்
6. ஏனை இரண்டும் - முற்றும்மை

**எண்ணும்மை**

1. வையகமும் வானகமும், மலர்தலும் கூம்பனும் - எண்ணும்மைகள்
2. அறிவிலார் (இல்லார்), பனைத்துணையா – (பனைத்துணையாக) எண்ணியங்கு
3. தந்தைக்கும் தாய்க்கும் - எண்ணும்மை
4. வாயிலும் மாளிகையும், மாடமும் ஆடரங்கும், ஈசனும் போதனும் - எண்ணும்மைகள்
5. பேரோடும் புகழோடும் - எண்ணும்மை
6. கங்கையும் சிந்துவும், விண்ணிலும் மண்ணிலும் - எண்ணும்மைகள்.

**முற்றும்மை**

ஏதேனும் ஒரு சொல் மட்டும் 'உம்' என்ற விகுதி கொண்டு முடியுமேயானால் அது முற்றும்மையாகும்.

எ.கா:

1. இரண்டும் 2. இரவும் 3. பெண்ணும்
4. வெற்றிலையும் 5. எல்லோரும் 6. முத்தமிழும்

**முற்றும்மை**

1. யாரையும் நம்பி - முற்றும்மை
2. யாரும் - முற்றும்மை
3. எழு பிறப்பும், யார்க்கும் எளிய – முற்றும்மைகள்
4. எம்மருங்கும் - முற்றும்மை

5. விரல்கள் பத்தும் தோள்கள் இரண்டும் - முற்றும்மைகள்

**சிறப்பும்மை:**

சிறப்பும்மை இரு வகைப்படும்.

அவை:
1. உயர்வுச் சிறப்பும்மை
2. இழிவுச் சிறப்பும்மை

**1. உயர்வுச் சிறப்பும்மை**

ஒரு பொருளை உயர்த்திச் சொல்வது
எ.கா: தமிழின் சுவை அழிழ்தினும் இனிது

**உயர்வுச்சிறப்பும்மைகள்**

* நிலத்தினும் வானினும் நீரினும்

**சிறப்பும்மைகள்**

1. உயிரினும் - 'உம்'மைகள் உயர்வு சிறப்பும்மைகள்
2. பரிந்தும் - 'உம்'மைகள் உயர்வு சிறப்பும்மைகள்
3. எம்மனோர்க்கும் - உயர்வு சிறப்பும்மை

**உயர்வு சிறப்பும்மை**

* பாறையும் - உயர்வு சிறப்பும்மை
* என்னுடையரேனும், யார்யார்வாய்க் கேட்பினும், எய்தியக்கண்ணும் - உயர்வு சிறப்பு உம்மைகள்
* பெண்டிரும் - உண்டுகொல், சான்றோரும் உண்டுகொல் - 'உம்'மைகள் உயர்வு சிறப்பும்மைகள்
* செறுவார்க்கும் - இறந்தது தழுவிய எச்ச உம்மை உயர்வு சிறப்புமாம்

**2. இழிவுச் சிறப்பும்மை**

இழிந்த பொருளின் உயர்வைச் சொல்வது
எ.கா: நாயினும் இழிந்தவன்
இழிவுச் சிறப்பும்மை

* வயிற்றுக்கும் - இழிவுச்சிறப்பும்மை
* செய்யினும் - இழிவுச்சிறப்பும்மை

**இழிவு சிறப்பும்மை**

1. சிறிது எனினும், இன்னா செயினும், பிறர் செயினும் துன்ப முறவரினும் - இழிவு சிறப்பு உம்மைகள்
2. குருகும் - இழிவு சிறப்பு உம்மை
3. வழுக்கியும் - இழிவு சிறப்பும்மை

**உம்மைத்தொகைகள்**

× யாவையும் அடவிமலையாறு நாடுநகர்

**உம்மைத்தொகை**

× தாய்தந்தை - உம்மைத்தொகை
× சிரமுகம் - உம்மைத்தொகை
(சிரமும் முகமும்)

**அன்மொழித்தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகை நிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி (மறைந்து) நின்று பொருள் தருவது **அன்மொழித்தொகை** ஆகும்.

எ.கா:
1. கயல்விழி வந்தாள் - கயல் போன்ற விழி உடைய பெண் வந்தாள்.
   உயர்திணைப் பெயரைக் குறித்தால் இது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.
2. பூங்குழலி வந்தாள் - பூவை அணிந்த கூந்தல் உடைய பெண் வந்தாள், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.
   (பிற வேற்றுமைத் தொகைகளும் இவ்வாறே அமையும்.)
3. சுடுகதிர் எழுந்தான் - சுடுகதிர் - வினைத்தொகை சுடுகின்ற கதிரை உடைய சூரியன் எழுந்தான் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

**அன்மொழித்தொகை**

1. ஓதி தோற்றாள் (கூந்தலை உடைய பெண்ணாகிய தத்தை), வளைக்கை விரலும் (வளையை உடைய கையைக் கொண்ட பெண்ணாகிய தத்தை விரலும்) இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.
2. பாயலான் - (பாயலைச் சுமந்தவனாகிய திருமால்) - இரண்டாம் வேற்றுமை தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை
3. பவளச்செவ்வாய் நரம்பு உளர (பவளம் போல் சிவந்த வயினை உடைய பெண்ணாகிய தத்தை நரம்பைத் தடவ) – உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை

**தொகா நிலைத் தொடர்**

ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து, அவற்றின் இடையில் சொல்லோ, உருபோ மறையாது பொருளை உணர்த்துவது தொகா நிலைத் தொடர் எனப்படும்.
எ.கா: மழை பெய்தது
முதல் தொடரில் மழை என்னும் எழுவாயும் பெய்தது என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று வேறு சொல் வேண்டாது பொருளை உணர்த்துகின்றன. எனவே இது தொகா நிலைத் தொடர் எனப்படும்.

**தொகா நிலைத் தொடர் ஒன்பது வகைப்படும்.**

1. எழுவாய்த் தொடர்
2. விளித் தொடர்
3. வினைமுற்று தொடர்
4. பெயரெச்சத்தொடர்
5. வினையெச்சத்தொடர்
6. வேற்றுமைத்தொகாநிலைத் தொடர்
7. இடைச்சொல் தொடர்
8. உரிச்சொல் தொடர்
9. அடுக்குத் தொடர்

“முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள் ஆறுருபு இடையுரி அடுக்கிவை தொகாநிலை”
- நன்னூல் - 374

**1. எழுவாய் தொடர்**

கபிலன் வந்தான் - இதில் கபிலன் என்னும் எழுவாயைத் தொடர்ந்து “வந்தான்” என்னும் பயனிலை வந்துள்ளதால் இது எழுவாய்த்தொடர் எனப்படும்.

**2. விளித்தொடர்**

கதிரவா! வா - இது விளித்தொடர் (அழைக்கிறது)

**3. வினைமுற்றுத் தொடர்:**

கண்டேன் சீதையை – வினைமுற்று முதலில் வந்து பெயரைத் தொடர்கிறது.

**வினைமுற்று**

1. கேட்க - வியங்கோள் வினைமுற்று
2. ஈயப்படும், கேட்க – வியங்கோள் வினைமுற்று
3. காண்க – வியங்கோள் வினைமுற்று
4. இறப்பினை என்று பொறுத்தல் (பொறுத்துக் கொள்க) – ‘தல்’ விகுதி பெற்ற உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று
5. அதனினும் நன்று – குறிப்பு வினைமுற்று
6. வாயினராதல் அரிது – குறிப்பு வினைமுற்று
7. ஒழுகப்படும் - ‘செய்யும்’ என்னும் வாய்பாட்டு வினைமுற்று
8. வையார் - எதிர்மறை பலர்பால் வினைமுற்று
9. விடல் - அல்லீற்று வியங்கோள் வினைமுற்று
10. துய்ப்போம் - தன்மைப்பன்மை வினைமுற்று
11. பொதிந்து வைப்பர் - உடன்பாட்டுப் பலர்பால் வினைமுற்று
12. செய்வாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று
13. என்ப – பலர்பால் வினைமுற்று

**வினைமுற்று**

✖ **வியங்கோள் வினைமுற்று**

வாழியர் காக்க ஈக
சுமக்க, ஒக்க(ஒத்திருக்க) போக,
நடக்க, ஒழிக, ஆகுக
வாழ்க காக்க, ஈக, சுமக்க
ஒக்க(ஒத்திருக்க) பணிகுவாம்

- இறைஞ்சுவாம் - தன்மைப் பன்மை வினைமுற்றுகள்
- கரந்தோம், அகப்பட்டோம் - தன்மைப் பன்மை வினைமுற்றுகள்
- பரவுவதும் - தன்மைப் பன்மை வினைமுற்று
- வந்தோம், வென்றோம் - தன்மைப்பன்மை இறந்தகால வினைமுற்றுகள்
- பருகுகின்றோம் - தன்மைப் பன்மை நிகழ்கால வினைமுற்று
- காப்போம் - தன்மைப் பன்மை நிகழ்கால வினைமுற்று
- பரவுவதும் - தன்மைப் பன்மை வினைமுற்று
- நிறைந்தனை, தீர்ந்தனை, சார்ந்தனை, வாய்ந்தனை, ஒளிர்ந்தனை, பூண்டனை – முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்
- உய்க்கும், பார்க்கும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்றுகள்
- இல்லை, பொருட்டு, அரிது, தகைத்து, உடைத்து – குறிப்பு வினைமுற்றுகள்
- சோகாப்பர் - பலர்பால் வினைமுற்று
- ஆறும் - உடன்பாட்டு ஒன்றன்பால் வினைமுற்று
- ஆறாது - எதிர்மறை ஒன்றன்பால் வினைமுற்று
- இது வேண்டா – எதிர்மறை குறிப்பு வினைமுற்று
- அடைத்தனம் - உளப்பாட்டுத் தன்மை பன்மை வினைமுற்று
- தீண்டன்மின் - எதிர்மறை ஏவல் வினைமுற்றுகள்
- நினையுமின் - உடன்பாட்டு ஏவல் வினைமுற்று
- பாவியேன் - தன்மை உருமை வினைமுற்று
- உடல்கள் அறுத்தார் - இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று
- படிப்பார், பிடிப்பார், தொழுவார், தருவார், கொடுப்பார், தடுப்பார், துடிப்பார் - படர்க்கை பலர்பால் வினைமுற்றுகள்
- அவாவிற்று – ஒன்றன்பால் வினைமுற்று
- பெய்திடாய் - ஏவல் வினைமுற்று
- கரவேல் - எதிர்மறை ஏவல் வினைமுற்று
- பறவை வீழ்ந்த (வீழ்ந்தன) – பலவின்பால் இறந்தகால வினைமுற்று
- நரம்பு கொண்டான் - ஆண்பால்வினைமுற்று

**விளி**

1. சான்றீர் - விளி
2. சேர்ப்ப - அண்மை விளி

**4. பெயரெச்சத் தொடர்:**

விழுந்த மரம் - விழுந்த என்னும் எச்சவினை "மரம்" என்னும் பெயர்ச்சொல்லோடு முடிந்துள்ளது.

**<u>பெயரெச்சம்</u>**

**1. <u>ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்</u>**

| | |
|---|---|
| இன்னாச்சொல் | கல்லா ஒருவற்கும் |
| கொல்லா | சொல்லா |
| தேரா | எஞ்சா |
| எதிரிலா | |

**2. <u>பெயரெச்சங்கள்</u>**

| | | |
|---|---|---|
| பொன்றும் | படித்த | தீர்த்த |
| ஈண்டிய | நுணங்கிய | ஆன்ற |

**3. <u>எதிர்மறைப் பெயரெச்சங்கள்</u>**

| | |
|---|---|
| பாடாத | எறியாத |
| கொல்லாத | |
| பறவாத | பண்ணாத |
| தொடாத | |
| சூடாத | பூவாத |
| முடியாத | |
| சொல்லாத | இல்லாத |

**<u>பெயரெச்சம்</u>**

- **<u>ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்</u>**

| | |
|---|---|
| வரையா மரபு | அவிழாக் |
| கோட்டுகிர் | |
| உண்ணா உயக்கம் | நிரம்பா நீளிடை |
| நீங்காப் பூரணமாய் | இணையிலாப் |
| பசுமை | |
| வேண்டாக் கடப்பாடு | தப்பா மரம் |
| அமைகலா ஆறு | நீங்கா இன்பம் |
| வேண்டாக் கடப்பாடு | தப்பா மரம் |
| அமைகலா ஆறு | |

- மலர்ந்த வேங்கை, இருந்த தோகை - இறந்தகாலப் பெயரெச்சங்கள்
- ஆர்ந்த துகில் - இறந்தகாலப் பெயரெச்சம்

- போர்த்த பிடவை - பெயரெச்சம்
- துயிலாநின்ற - நிகழ்காலப் பெயரெச்சம்
- நொந்த புண் - பெயரெச்சத் தொடர்
- நீங்காத - எதிர்மறைப் பெயரெச்சம்
- தந்த பால், இடும் சேனை, கடைந்த பாயலான் - இறந்தகாலப் பெயரெச்சங்கள்
- பறித்த மயிர் - பெயரெச்சம்
- ஊறிய இதழ் - பெயரெச்சம்
- அமைத்த மலை, கொடுத்த மலை, நின்ற மலை, கெடுத்த மலை, சபித்த மலை – பெயரெச்சங்கள்
- பூக்கின்ற, ஈக்கின்ற, காக்கின்ற – நிகழ்காலப் பெயரெச்சங்கள்
- தூக்காத ஒப்புரவு – எதிர்மறைப் பெயரெச்சம்
- மூவாத ஞாயிறு - எதிர்மறைப் பெயரெச்சம்
- பழுத்த நெல், சிக்கிய கோழை – ‘செய்த’ என்னும் வாய்ப்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சங்கள்
- உதைத்த சரமழை – பெயரெச்சம்
- மூவாத சரமழை – பெயரெச்சம்
- மூவாத முதல்வன், ஓவாத பெருங்குணம் - எதிர்மறைப் பெயரெச்சங்கள்
- வைத்த கோலம் - பெயரெச்சம்
- சுட்ட புண், சுட்ட வடு - இறந்தகாலப் பெயரெச்சங்கள்
- தந்த பொருள், கூம்பும் பருவத்து, சீர்த்த இடத்த – பெயரெச்சங்கள்
- கழித்த வேல், கிடந்த ஞானம் - பெயரெச்சங்கள்
- தரும் பொருள் - ‘செய்யும்’ என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சம்
- கட்டும் தேவாதி தேவன் - ‘செய்யும்’ என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சம்
- வாசிக்கும் பல்கருவி - ‘செய்யும்’ என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சம்

**5. வினையெச்சத் தொடர்**

வந்து போனான் - “வந்து” என்னும் எச்சவினை “போனான்” என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது.

**<u>வினையெச்சம்</u>**

1. பொதிந்து, போற்றி - வினையெச்சங்கள்
2. புரந்து, எழுதி, துதிக்க – வினையெச்சம்
3. புக்கு - வினையெச்சம்
4. எழுதாது - எதிர்மறை வினையெச்சம்
5. சேராது - எதிர்மறை வினையெச்சம்
6. உண்ணாது - எதிர்மறை வினையெச்சம்

**6. வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்:**

செய்யுளை எழுதினான் இத்தொடரில் “ஐ” என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக நின்று பொருளை உணர்த்துகிறது.

**7. இடைச்சொல் தொடர்:**

மற்றொன்று – மற்று + ஒன்று. இதில் மற்று என்னும் இடைச்சொல்லை அடுத்து ஒன்று என்னும் சொல் நின்று பொருள் தருகிறது.

**<u>இடைச்சொல்</u>**

1. பொள்ளென - விரைவுக் குறிப்பு மொழி: இடைச்சொல்
2. காரணம் என்கொல் - ஐயப்பொருள் உணர்த்தும் இடைச்சொல்
3. ஒல்லை – விரைவைக் குறிக்கும் இடைச்சொல்

**8. உரிச்சொல் தொடர்:**

மாமுனிவர் - “மா” என்பது உரிச்சொல் இதைத்தொடர்ந்து. முனிவர் என்னும் சொல் தொடர்ந்து வந்து பொருள் தந்துள்ளது.

**<u>உரிச்சொல்தொடர்</u>**

1. கடிமகள் - உரிச்சொல் தொடர்

- உறுகுறை, வைவாள், வாள்முகம், மாமதுரை, மாமலை, மாஞாலம் - உரிச்சொற்றொடர்கள்
- ஐ, அரி, மாதர் தகைய மடவார், மல்லல் மதுரை – உரிச்சொற்கள்
- நாமவேல், வைவேல் - உரிச்சொற்றொடர்கள்
- மாமதி – உரிச்சொற்றொடர்
- மாவலி - உரிச்சொற்றொடர்

**9. அடுக்குத் தொடர்:**

நன்று நன்று

ஒரே சொல் பலமுறை அடுக்கிவந்துள்ளது. ஒரு சொல் விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், அவலம், உவகை, தெளிவு முதலியவை காரணமாக இரண்டு மூன்று நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

**அடுக்குத்தொடர்**

1. புதிதுபுதிது - அடுக்குத்தொடர்
2. சொல்லிச்சொல்லி - அடுக்குத்தொடர்
3. நன்று நன்று - அடுக்குத்தொடர்

**அடுக்குத்தொடர்**

1. சீறிச்சீறி - அடுக்குத்தொடர்
2. ஆகுக ஆகுக, தினம் தினம், கணம்கணம் - அடுக்குத்தொடர்கள்
4. விடுதலை விடுதலை – அடுக்குத்தொடர்
5. 

**அடுக்குத்தொடர்**

1. வாழியவாழிய, தினந்தினம் - அடுக்குத்தொடர்கள்
2. யாரியார் - அடுக்குத்தொடர்
3. விக்கிவிக்கி – அடுக்குத்தொடர்
4. புடைபுடை – அடுக்குத்தொடர்
5. இனிதினிது, சுமைசுமையாய், துறைதுறையாய் - அடுக்குத்தொடர்கள்
6. அறைந்து அறைந்து – பன்மைபற்றிய அடுக்குத்தொடர்

**மூவகைப் போலிகள்**

ஒரு எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து வந்தாலும் பொருள் மாறுபடவில்லையாயின் அதனைப் 'போலி' என்பர்.

எ.கா:

அகன் - அகம், நிலன் - நிலம்

**போலி மூன்று வகைப்படும்.**

1) முதற்போலி
2) இடைப்போலி
3) கடைப்போலி

1) முதற்போலி

சொற்களின் முதலில் உள்ள எழுத்து மாற்றம் பெற்று அமைவது முதற்போலி எனப்படும்.

எ.கா: மஞ்சு – மைஞ்சு மயல் - மையல்

2) இடைப்போலி:

சொற்களின் இடையில் உள்ள எழுத்து மாற்றம் பெற்று அமைவது இடைப்போலி எனப்படும்.

எ.கா: முரசு – முரைசு அரசியல் - அரைசியல் இலைஞ்சி - இலஞ்சி

3) கடைப்போலி:

சொற்களின் இறுதியில் உள்ள எழுத்து மாற்றம் பெற்று அமைவது கடைப்போலி எனப்படும்.

✘ எ.கா: அறன் - அறம் பந்தர் - பந்தல்

அறன் - ஈற்றுப்போலிகள்
திறன் - ஈற்றுப்போலிகள்

4) முற்றுப்போலி:

சொல்லின் மூன்று எழுத்துகளும் முதல், இடை, கடை ஆகியவை மாறி நின்ற போதிலும் பொருள் மாறுபடவில்லை.

எ.கா: ஐந்து – அஞ்சு

எனவே இது முற்றுப்போலி எனப்படும்.

**போலி**

அரைசன் - இடைப்போலி

**போலி**

1. பந்தர் (பந்தல்) - ஈற்றுப்போலி
2. அறன் (அறம்) - இறுதிப்போலி

**போலி**

1. நயன் (நயம்), இடன் (இடம்), கொம்பு (கொம்பர்) – ஈற்றுப்போலிகள்
2. கொம்பர் - ஈற்றுப்போலி

**பதம்**

பதம் என்பதற்கு சொல் என்று பொருள். பதம் இருவகைப்படும். 1) பகாப்பதம் 2) பகுபதம்

**1. பகாப்பதம்:**

பகுத்தல் என்றால் பிரித்தல் என்பது பொருள். பகா என்றால் பிரிக்க இயலாதது என்பது பொருள். பிரிக்கவியலாத சொல் பகாப்பதம் எனப்படும்.

பகாப்பதம் நான்கு வகைப்படும்.

ை. பெயர்ப் பகாப்பதம் (எ.கா) தமிழ், அன்னை, மண், கல், பொன்
ைை. வினை பகாப்பதம் (எ.கா) வாழ், நட, போ, வா, செய், நில்
ைைை. இடைப் பகாப்பதம் (எ.கா) போல, மற்று, ஆல்
ைஎ. உரிப் பகாப்பதம் (எ.கா) நனி, தவ, சால

குறிப்பு:

இடைச் சொல்லும் உரிச்சொல்லும் எப்பொழுதும் பகாப்பதங்களாகவே இருக்கும்.

பகுப்பாற் பயனற்று இடுகுறியாகி
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம்

நன்னூல் - 131

2. பகுபதம்

பகுக்க இயலும் சொற்களைப் பகுபதம் எனப்படும். அவ்வாறு பகுக்கும்போது இரண்டு முதல் ஆறு உறுப்புகளாக அச்சொல்லை பிரிக்கலாம். அவ்வுறுப்புகளின் பெயர்களாவன பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகும்.

எ.கா: தலைவர் - தலை + வ் + அர்

**பகுபதம் இருவகைப்படும்**

1. பெயர்ப்பகுபதம்
2. வினைப்பகுபதம்

**1. பெயர்ப்பகுபதம்:**

பகுபதம் பெயர்ச் சொல்லாக இருப்பின் அது பெயர் பகுபதம் எனப்படும்.

பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும்.

ை. பொருட்பெயர்ப்பகுபதம் - (எ.கா) பொன்னன் செல்வன்
ைை. இடப்பெயர்ப்பகுபதம் - ஊரன் மதுரையான்
ைைை. காலப்பெயர்பகுபதம் - கார்த்திகை யான்
ைஎ. சினைப்பெயர்பகுபதம் - கண்ணன் தலையன்
எ. பண்புப்பெயர்பகுபதம் - கரியன் இனியன்
எை. தொழிற்பெயர்பகுபதம் - இயக்குநர் ஓட்டுநர்

**2. வினைப்பகுபதம்**

பகுபதம் வினைச்சொல்லாக இருப்பின் அது வினைப்பகுபதம்.

வினைப்பகுபதம் இரண்டு வகைப்படும்.

1. தெரிநிலை வினைப்பகுபதம் - படித்தான் ஓடினான்
2. குறிப்பு வினைப்பகுபதம் - நல்லன்.

**எச்சம்**

முடிவு பெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும். அவ்வெச்சம் பெயரெச்சம் என இருவகைப்படும்.

➢ **பெயரெச்சம்**

எச்சவினை பெயர்ச் சொல்லைத் தழுவி நின்று பொருள் முடிவைத் தருமானால் அது பெயரெச்சம் எனப்படும்.

எ.கா: பேசிய, பேசுகின்ற, பேசும்

✗ **பெயரெச்சம்**

| | |
|---|---|
| ஆய்ந்த பொற்கிழி | தேய்ந்த |
| பாய்ந்த | ஆய்ந்த |
| காய்ந்த | ஆன்ற பெருமை |
| வியர்த்த வியர்வன்றோ | படித்த விரகன் |
| தீர்த்த செழியன் | |

**பெயரெச்சம்**

இழிந்த பிறப்பு
மலர்ந்த கண்ணன்
அணைந்த வாகீசர்
உற்றநோய்
தாழ்ந்த
தளர்ந்த
இருந்தவள்ளல்

**பெயரெச்சம்**

வந்த பொருள்
காழ்ப்ப இயற்றியார்
முதிர்ந்தமேதி
பொதிந்தமெய்
நின்ற வேங்கை
அமைந்த காதல்
பார்த்தகண்ணை
சென்ற வட்டி
படர்ந்த தெண்டிரை
வாழும்குடி

**பெயரெச்சம்**

| | |
|---|---|
| இழிந்த | சென்ற வட்டி |
| இருண்ட | சென்ற |
| தூங்கும் | மருவும் |
| வாழும் குடி | படர்ந்த |
| நின்ற | அடைந்த |
| பதிந்த | பொதிந்த |
| கூம்பும் பருவத்து | சீர்த்த இடத்து |
| தாழ்ந்த | தளர்ந்த |
| வந்த பொருள் | எண்ணிய தேயம் |

**எச்சம்**

1. தோன்றாக் கெடும் - 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
2. பெறின் - 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
3. காவாக்கால், செய்யாது அமைகலா, தீராமை ஆர்க்கும், கலங்காது, அகலாக்கடை – எதிர்மறை வினையெச்சங்கள்
4. காத்து அடங்கல், ஆற்றிற் தந்த, படின், செயின் உளவோ, தூக்கிச் செயல், ஊக்கி முரிந்தார், பெயின் இறும், போற்றி வழங்கும் - வினையெச்சங்கள்
5. வாங்குபு – 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
6. நரம்பு உளர – 'செய'வென் வாய்பாட்டு வினையெச்சம்
7. நீக்கி, உய்த்து, சுரந்து, முதிர்ந்து, நொந்து, மறந்து – வினையெச்சங்கள்
8. பேதுறா - 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.
9. தூணிற்பிறந்து - 'செயது' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
10. போந்து, எறிந்து, நாட்டி, கும்பிட்டு, கொண்டு – வினையெச்சங்கள்
11. அன்றி – குறிப்பு வினையெச்சங்கள்
12. விம்மி, விழுந்து, அலறி, படிந்து, உதைத்து, உந்தி, எழுந்து, பதித்து, நிமிர்ந்து – வினையெச்சங்கள்
13. புலராமே, கம்மாமே, சிவவாமே, உண்ணாமே, நோவாமே – எதிர்மறை வினையெச்சங்கள்
14. இயம்பக் கேட்டிடல் - 'செய' வென் வாய்ப்பாட்டு வினையெச்சம்
15. வாழப் பெய்திடாய் - 'செய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்
16. மேவி வகுத்து – வினையெச்சம்
17. பொங்கி, செவந்து, சீறி, நெளித்து, பரந்து, தாக்கி, வெருவி, உளைந்து, கிழித்து, சுற்றி, அடைத்து, நீட்டி – வினையெச்சங்கள்
18. பிறந்து, கூட்டி, அருந்தி, பகைத்து, அணிந்து, அருளி, பசித்து, பெற்று, நின்று, தவழ்ந்து, இருந்து – வினையெச்சங்கள்
19. திறந்து வைத்த, ஏற்றி வைத்த – வினையெச்சங்கள்
20. அமைத்து, இறைத்து, வாங்கி – வினையெச்சங்கள்
21. குடித்துச் சுவைக்க – வினையெச்சம்
22. அறியார், ஒழுகான், அறியான் - (எச்சப் பொருளில் வந்தமையால்) முற்றெச்சங்கள்

**பெயரெச்சம்**

அசைத்த மொழி
இசைத்த மொழி
பொன்றும் துணையும்
சொல்லிய
சொல்லிய வண்ணம் செயல்
தீராத வறுமை
படாத துயரம்
தப்பிய மன்னவன்
ஈன்ற தந்தை
முழங்கிய சேதி
கொழுத்த புகழ்
இழந்த பரிசு
இரிந்த பாலன்
கேட்ட வாசகம்
ஆனாத செல்வம்
உணர்ந்த முதல்வன்

சுற்றிய பாங்கர் விட்ட வாள்
செற்ற சிலை இரிந்த பாலன்,
கேட்ட
வாசகம்

1. கொன்று அன்ன – குறிப்புப் பெயரெச்சம்
2. கதத்த மின், அரிய ஆண்மை – குறிப்புப் பெயரெச்சங்கள்
3. களையாத துன்பம், வளையாத செங்கோல் - எதிர்மறைப் பெயரெச்சங்கள்
4. விலகாத கூட்டை - எதிர்மறைப் பெயரெச்சங்கள்
5. நண்ணும் பருவம் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்
6. தூற்றும் குடி - 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்
7. தாவும் கண் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்
8. தூங்கும் பதி, பொருவுங்குடை, வரும் பெருமாள், உரைத்திடும் சந்தனம் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்
9. ஈன்ற குழவி - இறந்த காலப் பெயரெச்சம், இன்னாச்சொல், அழிக்கலாகா அரண், எற்றா விழுமம் - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்
   கதுவிடாத் திருநகர், இலா நெஞ்சம், எதிரிலாக் கடவுள் - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்
   அவியா விளக்கு - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்
   தமிழிலா நூல் (இலாத) - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

- வினைச்சொல்லின் ஈற்றெழுத்து கெட்டு (மறைந்து) எதிர்மறைப் பொருளைத் தருமானால் அது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.
- எ.கா
- பாடாப் பைங்கிளி
- இத்தொடரில் பாடாத என்னும் பெயரெச்சத்தின் ஈற்றெழுத்து 'த' கெட்டு பாடா என எதிர்மறைப்பொருளில் வந்துள்ளது.

- **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

1. அலகிலாவிளையாட்டு
2. கல்லா ஒருவற்கும்
3. கேளாத் தகையவே
4. கொல்லாநலத்தது
5. துவ்வா விடம்
6. பொல்லாக் காட்சி
7. இன்னாச்சொல்
8. தேராக் கீரன்
9. எதிரிலாக் கவி
10. சொல்லாநலத்தது
11. குறையா வன்கண்

- பாடாத - எதிர்மறைப் பெயரெச்சம்
- பறவாத - எதிர்மறைப் பெயரெச்சம்
- சூடாத - எதிர்மறைப் பெயரெச்சம்

- **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

| | | |
|---|---|---|
| 1. | எய்தாப் பழி | பழியில்லா மன்னன் |
| 2. | படராப் பஞ்சவ | அடங்காப் பசுந்துணி |
| 3. | தேரா மன்னா | ஏசாச் சிறப்பின் |
| 4. | சேலவொழியா வழி | பொய்யா விளக்கம் |
| 5. | வாராப் பொருளாக்கம் | தீராக் காதலன் |
| 6. | மீளா ஆள் | கூவா |
| 7. | ஈர்கிலாக் கள்வன் | செலவு ஒழியா வழி |
| 8. | நோக்கி வாழ்வான் | பழியில்லா மன்னன் |
| 9. | ஏமரா | மீளா ஆளாய் |
| 10. | வாரா | பொய்யா |
| 11. | அடங்காப் பசுந்துணி | படராப் பஞ்சவ |
| 12. | தேரா மன்னா | ஏசாச் சிறப்பின் |

மேற்கண்ட சொற்களுடன் அறிஞர் என்ற ஒரு பெயர்ச்சொல்லைச் சேர்த்துப் பாருங்கள்.

பேசிய அறிஞர், பேசுகின்ற அறிஞர், பேசும் அறிஞர் பெயரெச்சம் இரு வகைப்படும்.

1) தெரிநிலைப் பெயரெச்சம்
2) குறிப்புப் பெயரெச்சம்

**1) தெரிநிலை பெயரெச்சம்**

பெயரெச்சம் காலத்தையும், செயலையும் உணர்த்துமாயின் அது தெரிநிலை பெயரெச்சம் ஆகும்.

எ.கா: படித்த மாணவன்
படிக்கின்ற மாணவன்
படிக்கும் மாணவன்

இப்பெயரெச்சத் தொடர்கள் செயலையும் காலத்தையும் தெளிவாக உணர்த்துகின்றன. எனவே தெரிநிலை பெயரெச்சம் எனப்படும்.

**2) குறிப்பு பெயரெச்சம்**

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், உணர்த்தாமல் பண்பை மட்டும் உணர்த்தி வரும் பெயரெச்சம் ஆகும்.

1. நல்ல தாய் - குறிப்புப் பெயரெச்சம்
2. நெடிய தானை - குறிப்புப் பெயரெச்சம்
3. இனிய நண்பர் - குறிப்புப் பெயரெச்சம்

- வினையெச்ச விகுதி ‘இ’ ‘உ’ சில இடங்களில் ‘அ’ அம் வரும்.

எ.கா: அழகிய கன்று
பெரிய வீடு
புதிய சட்டை

- குறிப்புப் பெயரெச்சம்
- இனிய நண்பர் - குறிப்புப் பெயரெச்சம்

➢ **வினையெச்சம்**

- முடிவு பெறாத எச்ச வினைச்சொல் ஒரு வினை முற்றினை ஏற்றுத் தொடர்ப் பொருள் முடிவு பெறுமாயின் அவ்வெச்சவினை வினையெச்சம் எனப்படும். அது தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும்.

எ.கா: வந்து, வர, கண்டு, படித்து, செய்து

**வினையெச்சம்**

போற்றி பொதிந்து நொந்து
உண்ணாது கடந்து பாய்ந்து
செறிந்து உரைத்து இரந்து
சொல்லி இறைஞ்சி
வினையெச்சம்
விளக்கி சிறந்து நோக்கி

**வினையெச்சம்**

விழுந்து வெந்து
வினையெச்சம்
உலர்ந்து எனா கூர
கடக்க ஓடி
இளைத்து
நோக்கி வழங்கி

× **வினையெச்சம்**

பொருந்தி வந்து
வினையெச்சம்
வணங்கி ததும்பி
வெதும்பி
செயின் உளவோ புகுந்து காழ்ப்ப
புரள அறிந்து ஓம்பி
தெரிந்து அறிய குவிய
இழிய பொலிய வந்து
பணிந்து வளைத்து
புதைந்து
கடந்து அடைந்து
தொழுது
நிமிர்ந்து மடித்து வீழ்ந்து
கலங்கி நடந்து குனித்து
உரைத்து

1. எழுதாது - எதிர்மறை வினையெச்சம்
2. கல்லாது கோட்டி கொளும் - எதிர்மறை வினையெச்சம்
3. தீராமை ஆர்க்கும் - எதிர்மறை வினையெச்சம்
4. கலங்காது இருப்பார் - எதிர்மறை வினையெச்சம்
5. எய்தற்கு அரிய - எதிர்மறை வினையெச்சம்
6. இன்றி – குறிப்பு வினையெச்சம்

7. கேளா (கேட்டு) – செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
8. உய்ய – ‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
9. தழைப்ப - ‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
10. உரை கேளா - ‘செய்யா’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

**வினையெச்சம்**

1. நெருங்கி, கண்டுளி, வெருவி – வினையெச்சங்கள்
2. முயலாமே - வினையெச்சம்
3. மயங்கி, பிணங்கி, வணங்கி, உயங்கி – வினையெச்சங்கள்
4. காயக்கண்டது, கலங்கக் கண்டது, மாயக் கண்டது, மறுகக் கண்டது, சாயக் கண்டது, தேயக் கண்டது, தனிப்பக் கண்டது – வினையெச்சங்கள்
5. நொந்து, போற்றி, செலச்சொல்லி, பொதிந்து, அதிர வருவது, எய்தி, கண்டு, கலங்காது, துளங்காது, கடிந்து – வினையெச்சங்கள்
6. செய்யாமல் செய்த – எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சம்
7. நயன் தூக்கின் - எதிர்கால வினையெச்சம்
8. செலவிடா – எதிர்மறை வினையெச்சம்
9. ஆற்றாது அழுவாளை - எதிர்மறை வினையெச்சம்
10. என்னா ஆர்த்த – ‘செய்யா’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
11. ஒளிப்ப, பொருந்தத் தழீஇ, - ‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
12. இரட்ட, நிழற்ற, கவிப்ப, தெருள - ‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
13. மாண, இடைகொட்கின் (கொட்க) – செயவென் எச்சங்கள்

**1) தெரிநிலை வினையெச்சம்**

காலத்தையும் செயலையும் வெளிப்படையாக உணர்த்தும் வினையெச்சம், தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

எ.கா:

எழுந்து வந்தாள் பார்க்கச் சென்றான்
காணின் மகிழ்வாள் வந்தால் மகிழ்வாள்

மேற்கண்ட தொடர்களிலுள்ள எழுந்து, பார்க்க, காணின், வந்தால் எனும் சொற்கள் வினையெச்சச் சொற்களாகும்.

இவை காலத்தை வெளிப்படையாக உணர்த்துகின்றன.

எழுந்து வந்தாள் - இறந்த வினையெச்சம்
பார்க்கச் சென்றான் - நிகழ்கால வினையெச்சம்
காணின் மகிழ்வாள் - எதிர்கால வினையெச்சம்

இவ்வாறு காலத்தையும் செயலையும் வெளிப்படையாக உணர்த்தும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

**2) குறிப்பு வினையெச்சம்**

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பின் அடிப்படையில் பொருள் உணர்த்தும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சம் ஆகும்.

எ.கா:

1. துன்பம் இன்றி வாழ்ந்தான் - ‘இன்றி’
2. மெல்ல நடந்தான் - “மெல்ல”
3. உண்மை அல்லாமல் கூறான் - “அல்லாமல்”
4. நல்ல மாணவன் - “நல்ல”

அழகிய மலர் - “அழகிய”

இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பின் அடிப்படையில் பொருள் உணர்த்தும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சம் ஆகும்.

**முற்றெச்சம்**

ஓடினான் விழ்ந்தான்
படித்தனன் தேறினான்

இத்தொடரிகளுள் ஓடினன் என்பது ஓடி என்னும் வினையெச்ச பொருளிலும், படித்தனன் என்பது படித்து என்னும் வினையெச்சப் பொருளிலும் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு உரு வினை முற்றுச்சொல் வினையெச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சமாகும் முற்றாக இருக்கும் அச்சொல் எச்சப் பொருளில் வழங்குவது முற்றெச்சமாகும்.

எ.கா: கண்டனன் வீழ்ந்தான்
படித்தனன் தேறினான்

**முற்றெச்சம்**

- துஞ்சான் - முற்றெச்சம்
- படையும் - உம் - இறந்தது தழீஇய எச்சம்

**முற்றெச்சம்**

1. திருத்தினன்(திருத்தி) - முற்றெச்சம்
2. கொணர்ந்தேன் - முற்றெச்சம்
3. புக்கான் (புகுந்து) - முற்றெச்சம்
4. சென்றனன் (சென்று) - முற்றெச்சம்
5. உரையார் (கூறாமல்) - முற்றெச்சம்
6. குறுகினள் (அணுகி) - முற்றெச்சம்
7. குழைந்தனள் (குழைந்து) - முற்றெச்சம்
8. தாழ்ந்த குடையன் - குறிப்பு முற்றெச்சம்
9. தளர்ந்த செங்கோலன் - குறிப்பு முற்றெச்சம்
10. தாழ்ந்த குடையன் - குறிப்பு முற்றெச்சம்
11. தளர்ந்த செங்கோலன் - குறிப்பு முற்றெச்சம்
12. முறுவலன் விளம்பலுற்றான் - குறிப்பு முற்றெச்சம்
13. புல்லார் - புரளவிடல் முற்றெச்சம்

**முற்றெச்சம்**

1. பயன் தூக்கார் - எதிர்மறை முற்றெச்சம்
2. நின்றிலள் நின்ற சிலம்பு – முற்றெச்சம்
3. ஏங்குவான் (ஏங்கியவனாய்), கேட்டனர் மருண்டார்,
தொடர்ந்தனன் நகைப்பான் - முற்றெச்சங்கள்

- **வேற்றுமை உருபேற்கும் போது திரியும் பெயர்கள்**
வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இவற்றைக் குறித்து முன் வகுப்பில் தெளிவாகத் தெரியும். அவை தன்மை, முன்னிலை. படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களை ஏற்று வரும்போது திரியும் என்பது குறித்துக் காணலாம்.

**தன்மைப் பெயர்கள்:**

1) யான் + ஐ – என்னை
2) யான் + ஆல் - என்னால்
3) யான் + கு – எனக்கு
4) யான் + இன் - என்னில்
5) யான் + அது – எனது
6) யான் + கண் - என்கண்

- இவ்வாறு யான் என்னும் தன்மைப்பெயர் வேற்றுமை உருபேற்கும் போது 'என்' எனத் திரிந்தது.
- இதே போன்று 'யாம்' என்னும் தன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது 'எம்' எனத் திரியும்.
- இதே போன்று நாம் எனும் தன்மைப் பெயர் 'நம்' எனக் குறிக்கும் நம்மை, நம்மல், நமக்கு, நம்மின், நமது, நங்கண்.
- யாங்கள், நாங்கள் எனும் தன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும் போது எங்கள் எனத் திரியும்.
எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது, எங்களிடம்

**முன்னிலைப் பெயர்கள்:**

நீ எனும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும் பொழுது நின் எனவும் 'உன்' எனவும் திரியும்.

1) நீ + ஐ – நின்னை உன்னை
நீ + ஆல் – நின்னால் உன்னால்
நீ + கு – நினக்கு உனக்கு
நீ + இன் – நின்னின் உன்னின்
நீ + அது – நினது உனது

2) இதே போன்று நீர் எனும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நும், உம், எனத் திரியும்.

நும்மை, உம்மை, நும்மால், உம்மால், நுமக்கு, உமக்கு, நும்மின், உம்மின், நுமது, உமது, நுங்கண், உங்கண்.

நீங்கள் எனும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபுற்கும் போது நுங்கள்' 'உங்கள்' என மாறுபடும்.

நுங்கள், உங்களை, நுங்களால், உங்களால், நுங்களுக்கு, உங்களுக்கு, நுங்களின், உங்களின், நுங்களது, உங்களது, நுங்களின்கண், உங்களிக் கண்.

**படர்க்கைப் பெயர்கள்**

1. தான் எனும் படர்க்கைப் பெயர்வேற்றுமை உருபேற்கும்போது தன் எனத் திரியும்.

தான் + ஐ – தன்னை

தான் + ஆல் – தன்னால்

2. இதை போன்றது "தாம்" எனும் படர்க்கைப் பெயர் 'தம்' எனத் திரிந்து வேற்றுமை உருபை ஏற்கும்.

தான் + கு – தனக்கு

தான் + இன் – தன்னின்

தான் + இது – தனது

தான் + கண் – தன்கண்

3. தாங்கள் எனும் படர்க்கைப் பெயர் 'தங்கள்' எனத் திரியும். தங்களை தங்களால் தங்களுக்கு தங்களின் தங்களது தங்கண்

"தான்தாம் நாம் முதல் குறுகும் யான்யாம்
நீநீர் என் நின்றும் ஆம்பிற
குவ்வின் அவ் நான்கு ஆறு இரட்டல்"

நன்னூல் - 247

## ❖ ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர், அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டு பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

**1. பொருளாகு பெயர்:**

ஒரு முழுப் பொருளின் பெயர் தன்னைச் சுட்டாது அதன் உறுப்புக்கு ஆகி வருவது முதலாகு பெயர் எனப்படும். இதனைப் பொருளாகு பெயர் என்று அழைக்கப்படுகிறது.

(எ.கா) தமிழரசி மல்லிகை சூடினாள்.

இத்தொடரில் உள்ள மல்லிகை என்னும் சொல் வேர், கொடி, இலை, பூ, ஆகிய உறுப்புகள் அனைத்தும் சேர்ந்த முழுப் பொருளைக் குறிக்கிறது. ஆனால் அடுத்துள்ள சூடினாள் என்னும் பயனிலையால் மல்லிகை என்னும் பெயர், முழுப் பொருளை உணர்த்தாது அதன் ஓர் உறுப்பாகிய மலரை மட்டும் உணர்த்துகிறது. எனவே இது பொருளாகு பெயர்.

(எ.கா) பூசணிச் சாம்பார் சுவையாக இருந்தது.

**2. இடவாகு பெயர்:**

ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது 'இடவாகு பெயர்' எனப்படும்.

எ.கா:

1. கிரிக்கெட்டில் இந்தியா வென்றது
2. காஞ்சிபுரம் என்ன வலை?

**3. காலவாகு பெயர்:**

காலப்பெயர் காலத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) 1. மார்கழி சூடினாள்

2. டிசம்பர் பூ சூடினாள்

3. கோடை நன்றாக விளைந்துள்ளது.

**4. சினையாகு பெயர்:**

ஒரு சினையின் (உறுப்பு) பெயர் அதனோடு தொடர்புடைய முழுப் பொருக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) வெற்றிலை நட்டான்

இத்தொடரில் உள்ள வெற்றிலை என்பது சினையாகிய இலையைக் குறிக்காமல் அதன் முதல் பொருளாகிய கொடிக்கு ஆகி வந்தது. அதனால் அது சினையாகு பெயர் ஆகும்.

(எ.கா) 1. ஆசிரியர் தலைக்கு ஒரு வினாத்தாள் தந்தார்

2. தலைக்கு ஒரு பழம் கொடு

**5. பண்பாகு பெயர்:**

ஒரு பண்புப் பெயர், அப்பண்பைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இது குணவாகு பெயர் என்று வழங்கப்பெறுகிறது.

எ.கா: வெள்ளை அடிப்போம்.

வெள்ளை என்பது நிறப்பண்பு, ஆனால் அது நிறத்தைக் குறிக்காமல், சுண்ணாம்பைக் குறித்து வந்தது. அதனால் இது பண்பாகு பெயர் இதனைக் குணவாகுபெயர் எனவும் அழைக்கப்படுகிறது.

எ.கா: 1. இளங்கோ இனிப்பு வழங்கினான்

2. செவலையை வண்டியில் பூட்டு

× விருந்து - பண்பாகு பெயர்

**6. தொழிலாகு பெயர்:**

ஒரு தொழிற்பெயர் அத்தொழிலிருந்து பெறப்படும் பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

எ.கா: பொங்கல் உண்டோம்

இங்குப் பொங்கல் என்பது பொங்குதலாகிய தொழிற்பெயர். இத்தொழிற்பெயர் தொழிலைக் குறிக்காமல், அத்தொழிலால் ஆகும் உணவைக் குறித்தது, அதனால் இது தொழிலாகு பெயர்.

**7. தானியாகு பெயர்:**

ஓர் இடப்பெயர், அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயராகும் ஓரிடத்திலுள்ள பொருள் அவ்விடத்திற்கு ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும்.

எ.கா: பாலை வண்டியில் ஏற்று

பால் என்னும் நீர்மப் பொருள் ஏற்றும் என்னும் குறிப்பால் பால் வைக்கபட்டிருக்கும் தானமாகிய (இடமாகிய) குடத்திற்கு ஆகி வந்து தானியாகு பெயர் ஆயிற்று. (தானம் - குடம், தானி – பால்)

**8. உவமையாகு பெயர்:**

ஒரு உவமானப் பெயர், தொடர்புடைய உவமேயப் பொருளுக்கு ஆகி வருவது உவமையாகு பெயர்.

எ.கா: நாரதர் வருகிறார்

ஒருவரைப் பார்த்து நாரதர் வருகிறார் குறிக்கும் பெயராகிய நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைப் போன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகி வந்தது. அதனால் இ∴து உவமையாகு பெயர் ஆகும்.

எ.கா: காளை வந்தான்

**9. கருவியாகு பெயர்:**

ஒரு கருவியின் பெயர் அதனால் உண்டாகிய காரியப் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.

எ.கா: யாழ் கேட்டு மகிழ்ந்தாள்

யாழ் என்னும் இசைக் கருவியின் பெயர், அதனால் உண்டான இசைக்கு ஆகி வந்து யாழ் ஓசை கேட்டு மகிழ்ந்தான் என்றானதால் இது கருவியாகு பெயர் ஆகும்.

எ.கா: குழல் கேட்டு மகிழ்ந்தான்

**10. காரியவாகு பெயர்:**

ஒரு காரியத்தின் பெயர், அது உண்டாவதற்குக் காரணமான கருவிப் பொருளுக்கு ஆகி வருவது காரியவாகு பெயர் ஆகும்.

எ.கா: நான் சமையல் கற்றேன்

இங்கு சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு பெயராகி வருவது காரியவாகு பெயர்.

எ.கா: 1. களவியல் படித்தான்

2. நன்னூல் கற்றேன்.

**11. கருத்தா ஆகுபெயர்:**

ஒரு கருத்தாவின் பெயர், அவரால் இயற்றப்பட்ட நூலிற்கு ஆகி வருவது கருத்தா ஆகுபெயர் எனப்படும்.

எ.கா: திருவள்ளுவரைப் படித்துப்பார்.

இத்தொடரில் திருவள்ளுவர் என்பது அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகி வந்ததால், கருத்தாவாகு பெயர் பெற்றது.

எ.கா: அழகனிக்குத் திருவள்ளுவர் மனப்பாடம்.

**12. சொல்லாகு பெயர்:**

ஒரு சொல்லின் பெயர் தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் எனப்படும்.

எ.கா: வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது

இத்தொடரில் வள்ளுவர் சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்தால் இது சொல்லாகு பெயர்.

**13. எண்ணல் அளவை ஆகுபெயர்:**

**எண்ணைக்** குறிக்கும் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

எ.கா: ஒன்று பெற்றால் ஒளி மயம்

இத்தொடரில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர். அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்குப் பெயராகி வந்தது. இஃது எண்ணல் அளவை ஆகுபெயர்.

எ.கா: 1. நாலும் இரண்டு சொல்லுக்குறுதி
2. தலைக்கு ஒன்று கொடு

### 14. எடுத்தல் அளவை ஆகுபெயர்:

எடுத்தல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

எ.கா: ஐந்து கிலோ என்ன விலை?

"கிலோ" என்னும் எடுத்தலளவைப் (நிறுத்தலளவை) பெயர், தொடர்புடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு, சர்க்கரை) ஆகி வந்ததால் இது எடுத்தலளவையாகு பெயர் எனப்படும்.

### 15. முகத்தல் அளவை ஆகுபெயர்:

முகத்தல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

எ.கா: மூன்று லிட்டர் கொடு

லிட்டர் என்னும் முகத்தல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு (பால் மண்ணெண்ணெய்) ஆகி வந்தது. எனவே இது முகத்தளவையாகு பெயர் எனப்படும்.

### 16. நீட்டல் அளவை ஆகுபெயர்:

நீட்டல் அளவைப் பெயர் தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

எ.கா: மூன்று மீட்டர் கொடு

மீட்டர் என்னும் நீட்டல் அளவைப் பெயர் தொடர்புடைய பொருளுக்கு (துணி) ஆகி வந்தது. எனவே இது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும்.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுற்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே.

நன்னூல் - 29

**ஆகுபெயர்**

- நாழி - ஆகுபெயர்
- கழல் - தானியாகு பெயர்
- தேசம் - இடவாகுபெயர்

**ஆகுபெயர்**

- ஊக்கம் உடையான் - ஆகுபெயராய் வலிமையைக் குறித்தது.
- தாமரை நயனத்தான் - முதல் ஆகுபெயர்
- திருநீறு காப்பு - தொழிலாகு பெயர்
- ஒன்று செய்வான் - எண்ணாகு பெயர்
- எஃகு - கருவியாகு பெயர் (எஃகினால் ஆகிய ஆயுதம்)
- உலகத்தோடு - இடவாகுபெயர் (உலகம்)
- வாயில் - இடவாகுபெயர் (வாயிற்காவலன்) வந்து இலக்கணப்போலி
- கோயில் - இடவாகுபெயர் (அரண்மனையுள் அரசனைக்) காட்ட இலக்கணப்போலி
- ஊறறியும் - இடவாகுபெயர்
- கார்குலாம் நிறத்தன் - பண்பாகுபெயர்

**ஆகுபெயர்**

1. உள்ளம் (உள்ளத்தில் எழும் கருத்து – ஆகுபெயர்
2. எழுமை, ஐந்து, ஊக்கம் - ஆகுபெயர்கள்

**ஆகுபெயர்**

1. உலகு - இடவாகுபெயர்
2. புவி, வையம் - இடவாகுபெயர்கள்
3. முந்நூல் - காரண இடுகுறிப் பெயர்
4. இருந்த தோகை – சினையாகு பெயர்

**ஆகுபெயர்**

1. உலகம் - இடவாகு பெயர்
2. உலகு வேண்டாது - இடவாகு பெயர்
3. தரை (நாடு) கொண்ட – ஆகுபெயர்
4. காளை – உவமவாகு பெயர்
5. விருந்து – பண்பாகு பெயர்
6. மால் கழல் - தானியாகு பெயர்

❖ **பொருள்கோள்**

ஒரு செய்யுளில் சொற்களை அல்லது அடிகளை பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் நேராகவும் மாற்றியும் பொருள் கொள்ளும் முறைமையை பொருள்கோள் என்று வழங்குவர்

**பொருள்கோள் எட்டு வகைப்படும்.**

1. ஆற்று நீர்ப் பொருள்கோள்
2. மொழிமாற்றுப் பொருள்கோள்
3. நிரல்நிறைப் பொருள்கோள்
4. பூட்டுவிற் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளைமறிபாப்புப் பொருள்கோள்
7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
8. அடி மாறி மாற்றுப் பொருள்கோள்

**1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில், பொருளானது ஓடுகின்ற ஆற்று நீரோட்டம் போல, சொற்கள் முன் பின்னாக மாறாமல் நோராகப் பொருள் கொள்ளும் வகையில் அமைவது ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும்.

எ.கா: பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்

பொறிவாயில் ஐந்தவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகக் கொண்ட ஐவகை ஆசைகளையும் விட்ட இறைவனது. பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் - மெய்யான ஒழுக்க நெறியில் நின்றவர் நீடு வாழ்வார் - வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழிவர். இக்குறட்பாவில் பொறி வாயில் எனத் தொடங்கி, நீடு வாழ்வார் என்பது வரையிலுள்ள சொற்கள் முன்பின்னாக மாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக அமைந்து பொருள் கொள்ளும் வகையில் அமைந்தன. ஆதலின் இப்பாடல் ஆற்று நீர் பொருள்கோள் ஆகும்.

**2. மொழிமாற்றுப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில் அமைந்துள்ள சொற்களை ஓர் அடிக்குள்ளே மொழி மாற்றிப் பொருள் கொள்வது மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

எ.கா:

“அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்”

அருள்யாதெனில் கொல்லாமை அருள் அல்லது யாதெனில் உயிர்க்கொலை எனப்பொருள் கொள்வதால் மொழி மாற்றிப் பொருள்கோள் என வழங்கப்படும்.

**3. நிரல் நிறைப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல் நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது

எ.கா:

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

கணவனும் மனைவியும் இணைந்து அன்பு செய்வதே இல்வாழ்க்கையின் பண்பாகும். இருவரும் செய்யும் அறமே இல்வாழ்க்கையின் பயனாகும் என்பது இக்குறட்பாவின் கருத்து இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாவது. அன்பும் அறனும் உடையதாய் இருப்பதே ஆகும். என இரு அடிகளிலும் சொற்கள் நிரல் நிறையாக வந்துள்ளதால் இது நிரல் நிறைப் பொருள்கோள் எனப்படும்.

**4. பூட்டுவிற் பொருள்கோள்:**

**வில்லின்** இருமுனைகளையும் நாணால் இணைத்தல் போல ஒரு செய்யுளில் இறுதிச் சொல்லை முதற் சொல்லோடு சேர்த்துப் பொருள் கொள்ளுதல். பூட்டுவிற் பொருள்கோள் ஆகும். இதனை விற்பூட்டுப் பொருள்கோள் என்றும் வழங்குவர்.

(எ.கா)

“நெருதல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு”

உலகு என்னும் இறுதிச் சொல் முதல் சொல்லான நெருதல் என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்வதால் இது பூட்டுவில் பொருள்கோள்.

**5. தாப்பிசைப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில் நடுவில் நின்ற ஒரு சொல் ஊஞ்சல் கயிறு போன்று முன்னும் பின்னும் சென்று பொருள் கொள்ளும் முறையில் அமைவது தாப்பிசைப் பொருள்கோள் எனப்படும்.

தாம்பு இசை → தாப்பிசை – ஊஞ்சல் கயிறு அசைதல் போல (தாம்பு → ஊஞ்சல் கயிறு)

எ.கா:

"இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"

இப்பாடலில், சினத்தை என்னும் நடுகின்ற சொல்லைச் சினத்தை உடையவர் (இறந்தார்) இறந்தார் அணையர் எனவும் சினத்தைத் துறந்தார் (துறந்தார்) ஞானியர் துணை எனவும் அமைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

**6. அளைமறிபாப்புப் பொருள்கோள்:**

பாம்பு புற்றில் நுழையும் போது, தானே மடங்கி தலை மேலாகவும், வால் கீழாகவும் நிலை மாறுவது போல செய்யுளில் இறுதிச் சொல் அல்லது இறுதியடி கீழ் மேலவாய் இடையிலும் முதலிலும் சென்று பொருள் கொள்ளுமாறு அமைவது "அளைமறிபாப்புப் பொருள்கோள்" எனப்படும்.

அளை – புற்று, மறி – மடங்குதல், பாப்பு - பாம்பு

"காண்பார் கண்ணாரக் கடவுளை எப்போதும்
பூண்பார் புனிதத் தவம்"

இப்பாடலில் இறுதியிலுள்ள புனிதத் தவம் என்ற சொல் கீழ்மேலாக புனிதத் தவம் பூண்பார் எப்போதும் கடவுளைக் கண்ணாரக் காண்பார் என இயைந்து பொருள் கொள்ள வரும். இதற்கு அளைமறி பாப்புப் பொருள்கோள் என்று பெயர்.

**7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றொடொன்று சுட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

எ.கா

"கட்டிக் கரும்பு கசக்கும் மிகக்கனிந்த எட்டிக் கனியினிக்கும் என்னூரில் - பட்டியுள்ள காளை படிபால் கறக்குமேநல்பசு வேளை தவிரா துழும்"

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் விளங்காது. இதில் உள்ள சொற்களைக் கட்டிக் கரும்பு இனிக்கும். மிகக் கனிந்த எட்டிக்கனி கசக்கும் பட்டியிலிருக்கும் காளை மாடு நேரந்தவறாது உழும். நல்ல பசு மடி பால் கறக்கும் என இவ்வாறு பொருள் கொள்வதற்கு ஏற்ப அடிதோறும் மாறிக் கிடக்கின்ற சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: மொழி மாற்றுப் பொருள்கோள் என்பது அடிதோறும் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக் கொள்வது. கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்பது அடிகள் முழுவதும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள் கொள்வது ஆகும்.

**8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்:**

"செய்யுளில் எல்லா அடிகளையும் முன் பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.

எ.கா:

"மாறாக் காதலா் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென் தோள் வளை நெகி ழும்மே
கூறாய் தோழி யான் வாழு மாறே"

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாது.

❖ **வழாநிலை**

- **வழாநிலை**

இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

செல்வன் படித்தான்

இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப் பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே இது வழாநிலை எனப்படும்.

**வழாநிலை ஆறு வகைப்படும்**

1. திணை வழாநிலை : செல்வி பாடினாள், மாடு வந்தது.
2. பால் வழாநிலை : கண்ணன் வந்தான், நாய் ஓடியது
3. இட வழாநிலை : நான் வந்தேன், நீ வருவாய்
4. கால வழாநிலை : நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்
5. வினா வழாநிலை : தமிழ் இலக்கணம், எத்தனை வகைப்படும்.
6. விடை வழாநிலை : தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்ற வினாக்கும் சென்னை என விடையளித்தல்.

❖ **வழு நிலைகள்**

இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.

**வழுநிலை ஏழு வகைப்படும்.**

1. திணை வழு
2. பால் வழு
3. இட வழு
4. கால வழு
5. வினா வழு
6. விடை வழு
7. மரபு வழு

**1. திணை வழு**

என் மாமா வந்தது

மாமா என்னும் உயர்திணைப் பெயர் வந்தது என்னும் அஃறினை வினை கொண்டு முடிந்தது. அதனால், இது திணை வழு எனப்படும்.

**2. பால் வழு**

கண்ணகி வந்தான்

கண்ணகி என்னும் பெண்பாற் பெயர், வந்தான் என்னும் ஆண்பால் - வினை கொண்டு முடிந்துள்ளது அதனால் இது பால் வழு எனப்படும்

**3. இட வழு**

நாங்கள் வந்தார்கள்

நாங்கள் என்பது தன்மையிடத்துப் பன்மை பெயர் அப்பெயர் வந்தார்கள் என்னும் படர்க்கையிடத்துப் பலர் பாலோடு முடிந்துள்ளது. எனவே இத்தொடர் இட வழு எனப்படும்.

**4. கால வழு**

கரிகாலன் நாளை வந்தான்

இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலப் பெயரோடு வந்தான் என இறந்த கால வினை மயங்கி வந்துள்ளது. அதனால் இது கால வழு எனப்படும்.

**5. வினா வழு**

முட்டையிட்டது சேவலா பெட்டையா?

சேவல் எனப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதால் வினா வழு

**6. விடை வழு**

நாளை பள்ளி திறக்கப்படுமா?

என்ற வினாவுக்கு என் அத்தைக்கு உடல் நலமில்லை எனக் கூறுவது விடை வழு ஆகும்.

**7. மரபு வழு**

நாய் கத்தும். இத்தொடர் மரபு வழு ஏனெனில் நாய் குரைக்கும் என்பதே முறையான ஒலி மரபு ஆகும்.

❖ **வழுவமைதி**

இலக்கண முறையின்றி அமைந்திருப்பினும் ஒரு காரணம் கருதி இலக்கணமுடையதைப் போல ஏற்றுக் கொள்வது வழுவமைதியாகும்.

(வழு – குற்றம்: அமைதி – ஏற்றுக் கொள்ளுதல்)

எ.கா: தாய் தன் குழந்தையை என் கண்ணே! கண்மணியே என்று பாராட்டுவது அன்பு காரணமாக வந்த வழுவமைதி ஆகும்.

**வழுவமைதி பல வகைப்படும்**

1. திணை வழுவமைதி
2. பால் வழுவமைதி
3. இட வழுவமைதி
4. கால வழுவமைதி
5. மரபு வழுவமைதி

**1. திணை வழுவமைதி**

உவப்பு, உயர்வு, இழிவு, சிறப்பு, இனம் ஆகியவை காரணமாக ஒரு திணைச்சொல் மற்றொரு திணைச் சொல்லாக வருவது திணை வழுவமைதி எனப்படும்.

திங்களும் சான்றோரும் ஒப்பர் - (உயர்வு)

அரசனே நீயே எங்களுக்குத் தாய் (சிறப்பு)

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா – (இழிவு)

பசுவை என் தாயே என அழைத்தல் (உவப்பு)

குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம் (சினம்)

**2. பால் வழுவமைதி**

உவப்பு, உயர்வு, சிறப்பு, இழிவு, சினம் ஆகியவை காரணமாக ஒரு பால் சொல் மற்றறொரு பால் சொல்லாக வருவது பால் வழுவமைதி எனப்படும்.

தந்தை தன் மகனை வாடா ! என்று அழைப்பது உவப்பு நோக்கிக்கொண்ட பால் வழுவமைதி.

'வாள் ஏந்தினும் இவன் பேடி' என்பது இழிவு நோக்கிக்கொண்ட பால் வழுவமைதி ஆகும்.

**3. இட வழுவமைதி**

சிறப்பு, உயர்வு ஆகியவை காரணமாகத் தன்மை, முன்னிலை, படர்க்கை இடச் சொற்கள் மாறி வருவது இடவழுவமைதி எனப்படும்.

கண்ணன் என்பான் தன்னைப் பற்றிப் பிறரிடம் கூறும்போது இந்தக் கண்ணன் ஒரு நாளும், பொய் கூற மாட்டான் என தன்மையைப் படர்க்கையாய்க் கூறுவது இடவழுவமைதியாகும்.

**4. கால வழுவமைதி**

விரைவு, தெளிவு, மிகுதி ஆகியவை காரணமாக ஒரு காலத்திற்குரிய சொல்லை வேறொரு காலத்திற்குரிய சொல்லாகக் கொள்வது காலவழுவமைதி ஆகும்.

தேர்வுக் காலத்தில் எளிமையான வினாத்தளைக் கண்ட மாணவன் "யான் தேர்ச்சி அடைந்து விட்டேன்" என்று கூறுவது தெளிவு காரணமாக எதிர்காலம் இறந்த காலமாயிற்று. எனவே இது கால வழுவமைதியாகும்.

**5. மரபு வழுவமைதி**

நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் வழங்கினரோ அப்பொருளை அச்சொல்லால் அம்முறைப்படியே வழங்குவது மரபு ஆகும். ஆனால் ஏதேனும் ஒரு காரணம் பற்றி மரபு மாறி வழங்குதல் ஏற்றுக் கொள்ளப் படுமாயின் அது மரபு வழுவமைதி எனப்படும்.

எ.கா: 'கத்தும் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும்" - பாரதி

குயில் கூவும் என்பது மரபு. அதற்கு மாறாக கத்தும் என்று கூறியது மரபு வழுவாயினும் பெரும் கவிஞர் பாடினார் என்னும் காரணம் நோக்கி மரபு வழுவமைதி ஆயிற்று.

**உவம உருபுகள்**

ஒரு பொருளை அல்லது ஒரு செயலைச் சிறப்பித்துக் கூற அதைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது பேச்சு வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் உண்டு.

செய்யுள் வழக்கில் ஒப்பாக வரும் பொருள் உவமை. இது உவமம் உவமானம் என்னும் சொற்களால் கூறப்பெறும் சிறப்பிக்கப்படும் பொருள் உவமேயம் என்னும் சொல்லால் கூறப்பெறும்.

ஒப்புமையைக் காட்டுவதற்கு உவமைக்கும், உவமேயத்திற்கும் இடையில் வரும் சொல் 'உவம உருபு' என்று அழைக்கப்படுகிறது.

| உவம உருபு | | தொடர் |
|---|---|---|
| 1. | போல | - கிளிபோல பேசினாள் |
| 2. | புரைய | - வேய்புரை தோள் |
| 3. | ஒப்ப | - தாயொப்பப் பேசும் மகள் |
| 4. | உறழ | - முடிவு உறழ் தடக்கை |
| 5. | அன்ன | - மரன்ன சேவடி |
| 6. | மான மானும் | - கயம் மூழ்கு மகளிர் கண் தாமரை |
| 7. | கடுப்ப கடுப்ப | - ஏறுபெறும் பாம்பின் வைந்துணி |
| 8. | இயைய | - மின்னிற்கு இயைய மிளிரும் |
| 9. | ஏய்ப்ப இருப்பை | - அம்பு நுனி ஏய்ப்ப அரும்பி |
| 10. | நேர | - பொன் நேர் புதுமலர் |
| 11. | நிகர | - கண்ணொடு நிகர்க்கும் சுழிப் துங்குவளை |
| 12. | அன்ன | - செய்வான் அன்ன மேனி |
| 13. | இன்ன | - யாழின் இன்ன இன்சொல் |

"போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருவே"
- நன்னூல் 367

**உவம உருபு**

1. தூண்டலாமென (என) - உவம உருபு
2. கயன்முள் அன்ன - உவம உருபு
3. வாளில் தப்பிய - இல் - உருபு மயக்கம்
4. சென்ற இடத்தால் (இடத்தின்கண்) – உருபு மயக்கம்

❖ **விரியுவமை**

உவமை உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) ஆகிய இரண்டனையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரிவுவமை. இ∴து உவமைத் தொடர் எனப்படும்.

இத்தொடரில் தேன் - உவமை. மோழி – உவமேயம் போன்ற – உவம உருபு. இத்தொடரில் வெளிப்பட வந்துள்ளதனால் இது விரிவுவமை எனப்படும். இ∴து உவமைத் தொடராகும்.

தொகையுவமை

தேன் மொழி

இதில் உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே இதனைத் தொகையுவமை என்பர். இதனை உவமைத்தொகை எனவும் கூறுவர்.

**உவமை உருவகம்**

**உவமை**

ஒரு பொருளை அதைவிடச் சிறந்த பொருளோடு ஒப்பிட்டுக் கூறல் 'உவமை' எனப்படும். உவமைத் தொடரில் உவமைப் பொருள் (உவமானம்) முன்னும், உவமிக்கப்படும் பொருள் (உவமேயம்) பின்னுமாக அமைந்திருக்கும். (எ.கா)

மலரடி → மலர் போன்ற அடி
மலர் → உவமை
அடி → உவமேயம்

**உருவகம்**

உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது இரண்டும் ஒன்றே என எண்ணுமாறு ஒற்றுமை படக் கூறுவது உருவகம் ஆகும். உருவகத்தில் உவமேயம் முன்னும் உவமானம் பின்னுமாகக் கூறப்படும். (எ.கா)

அடி மலர் → அடியாகிய மலர்
அடி → உவமேயம்
மலர் → உவமை

**உருவகம்**

1. பதமலர் - உருவகம்
2. மனக்குரங்கு - உருவகம்
3. செல்வச்செவிலி - உருவகம்
4. அருள் குழவி - உருவகம்
5. கரகமலம் - உருவகம்
6. சரணகமலம் - உருவகம்
7. சாதனைப்பூக்கள் - உருவகம்

**உருவகம்**

1. புருவக்கொடி, மனப்பறவை – உருவங்கள்
2. சிலுவைமிசை – ஏழாம் வேற்றுமை உருபு
3. சினத்தீ – உருவகம்
4. கண்மலர் - உருவகம்

5. நமனை அஞ்சோம் (நமனுக்கு அஞ்சோம்) – உருபு மயக்கம்
6. முரல்வது ஒப்ப, ஆர்த்தது என, மடங்கல் அன்ன – உவம உருபுகள்
7. அருளினோடும் (அருளினால்) – உருபு மயக்கம்
8. விசும்பென்னும் கைத்தாய், மின்னுப்பொன்ஞாண், முகில் அருள், மாரித்தீம்பால், காமத்தீ – உருவகங்கள்

| | உவமை | உருவகம் |
|---|---|---|
| | உவமை | உருவகம் |
| 1. | அமுத மொழி | மொழியமுது |
| 2. | கயற்கண் | கண் கயல் |
| 3. | தேன் தமிழ் | தமிழ்த்தேன் |
| 4. | பூவிரல் | விரல்பூ |
| 5. | மதிமுகம் | முகமதி |
| 6. | மலரடி | அடிமலர் |
| 7. | முத்துப்பல் | பல்முத்து |
| 8. | மலர்ப்பாதம் | பாதமலர் |

**உருவகம்**

- பதமலர் - உருவகம்
- மருப்பூசி - உருவகம்
- மார்போலை - உருவகம்
- காமத்தீ - உருவகம்
- இன்ப சொரூபம் - உருவகம்
- மனக்குரங்கு - உருவகம்

**உருவகம்**

1. கைம்மலை, மதிவிளக்கு – உருவகங்கள்
2. தங்கத்தீவு, தங்கத்தோணி, பொற்கரை, தங்கத் திமிங்கலம் - உருவகங்கள்
3. கண்ணீர் வெள்ளம், பசிக்கயிறு, பம்பரம், மெல்லிய காம்பு, சிறுவிரல், தீக்குச்சிகள் - உருவகங்கள்

## மூவகை மொழிகள்

மொழியானது மூன்று வகைப்படும். (மொழி சொல்)

1. தனி மொழி
2. தொடர் மொழி
3. பொது மொழி

### 1. தனி மொழி

ஓர் எழுத்தோ, சொல்லோ தனித்து நின்று பொருளை உணர்த்துவது தனி மொழியாகும்.

(எ.கா) வா, கண், செய்தான், ஆ, கா, மனிதன், நிலம்

### 2. தொடர் மொழி

தனி மொழிகள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர் மொழி எனப்படும்.

(எ.கா) 1. வைகறையில் துயில் எழு
2. சாலச் சிறந்தது
3. அறம் செய விரும்பு
4. படம் பார்த்தான்
5. பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

### 3. பொது மொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே தொடர்ந்து நின்று பல பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் மைவது பொது மொழியாகும்.

(எ.கா) அந்தமான்

'அந்த + மான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் (விலங்கு) என வேறுபொருளையும் தருகின்றது.

இதே போல் பலகை, வைகை, தாமரை, வேங்கை முதலியன தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் வருவதை அறிக.

"ஒரு மொழி ஒரு பொருளவாம் தொடர் மொழி
பல பொரு என பொது இருமையும் ஏற்பன"
நன்னூல் 260

**யாப்பு: செய்யுள் உறுப்புகள் யாப்பு இலக்கணம்**

செய்யுள் இயற்றும் முறை பற்றிக் கூறும் இலக்கணம் யாப்பிலக்கணம் எனப்படும். செய்யுளுக்கு உரிய உறுப்புகளைக் கொண்டு செய்யுள் இயற்றும் இலக்கணத்தை விளக்கிக் கூறுவதால் யாப்பிலக்கணம் என்று அழைக்கப்படுகிறது.

(யாப்பு – யாத்தல் கட்டுதல், பொருள் பொருந்தத் தொடருமாறு சொற்களை அமைத்தல். செய்யுளைக் கட்டுதல்)

செய்யுள் பாட்டு, தூக்கு, கவிதை என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

**யாப்பின் உறுப்புகளின் வகைகள்:**

யாப்பின் உறுப்புகள் ஆறு வகைப்படும்.

1) எழுத்து
2) அசை
3) சீர்
4) தளை
5) அடி
6) தொடை

**எழுத்து:**

தமிழ் எழுத்துகளை யாப்பிலக்கண முறையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) குறில் 2) நெடில் 3) ஒற்று (மெய்)

❖ யாப்பு
யா → நெடில்
ப் → ஒற்று
பு → குறில்

**அசை:**

ஓரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலிப்பது அசை எனப்படும்.

அசை இரண்டு வகைப்படும். அவை

1) நேர் அசை 2) நிரை அசை

❖ நேர் அசை:

குறில் தனித்தும் குறில் ஒற்றெடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றெடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

எ.கா: குறில் தனித்து வரல் → க
குறில் ஒற்றுடன் வரல் → கல்
நெடில் தனித்து வரல் → கா
நெடில் ஒற்றுடன் வரல் → கால்

**நிரையசை:**

குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும் குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்று வருவது நிரையசை.

எ.கா:

குறில் இணைந்து வரல் → பட
குறில் இணைந்து ஒற்றுடன் வரல் → படம்
குறில் நெடில் இணைந்து வரல் → படா
குறில் நெடில் இணைந்து ஒற்றுடன் வரல் → படாம்

❖ **சீர்**

அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். சீர் நான்கு வகைப்படும்.

1) ஓரசைச்சீர்
2) ஈரசைச்சீர்
3) மூவசைச்சீர்
4) நாலசைச்சீர்

❖ **ஓரசைச்சீர்**

வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். ஆவற்றை ஓரசைச்சீர் என்பர். அவை நாள்(நேர்), மலர்(நிரை), காசு(நேர்பு), பிறப்பு(நிரைபு) என நால்வகை வாய்பாடுகள் ஒன்றைப் பெறும்.

எ.கா:

1) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்
என் - நேர்(நாள்)
2) செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்.
படும் - நிரை(மலர்)
3) நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு
நாடு - நேர்பு(காசு)
4) அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
உலகு – நிரைபு(பிறப்பு)

❖ **ஈரசைச்சீர்**

இரண்டு அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

| சீர் | | வாய்பாடு |
|---|---|---|
| நேர் + நேர் | → | தேமா |
| நிரை + நேர் | → | புளிமா |
| நிரை + நிரை | → | கருவிளம் |
| நேர் + நிரை | → | கூவிளம் |

**மாச்சீர் - 2** (தேமா, புளிமா என மாவில் முடிவதால் மாச்சீர்)

**விளச்சீர் - 2** (கருவிளம், கூவிளம் என விளத்தில் முடிவதால் விளச்சீர்)

(ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவிற்கு உரியவை)

இவை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

**மூவசைச்சீர்**

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச்சீர் ஆகும்.

❖ **காய்ச்சீர்**

(காய்ச்சீர்கள் - 4)

நேர் நேர் நேர் → தேமாங்காய்
நிரை நேர் நேர் → புளிமாங்காய்
நிரை நிரை நேர் → கருவிளங்காய்
நேர் நிரை நேர் → கூவிளங்காய்

இவை வெண்பாவிற்கு உரியன ஆதலின் வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

❖ **கனிச்சீர்**

(கனிச்சீர் - 4)

நேர் நேர் நிரை → தேமாங்கனி
நிரை நேர் நிரை → புளிமாங்கனி
நிரை நிரை நிரை → கருவிளங்கனி
நேர் நிரை நிரை → கூவிளங்கனி

இவை வஞ்சிப்பாவிற்கு உரியதால் வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

❖ **நாலசைச்சீர்**

மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிறையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.

❖ **தளை:**

நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் தளை எனப்படும். தளை ஒன்றியும் வரும் ஒன்றாமலும் வரும். (தளை – கட்டுதல்)

- ✓ ஒன்றி வருதலாவது : நேர் முன் நேரும். நிரை முன் நிரையும் வருதல்
- ✓ ஒன்றாமல் வருதலாவது : நேர் முன் நிரையும், நிரை முன் நேரும் வரும்.

எ.கா:

கண்.·.ணா மன்.·.னா
நேர் நேர் நேர் நேர்
- நேர் அசைகள் ஒன்றி வந்தன

உயர்.·.வற உயர்.·.நலம்
நிரை நிரை நிரை நிரை
- நிரை அசைகள் ஒன்றி வந்தன

அக.·.ர முத.·.ல
நிரை நேர் நிரை நேர்
மலர்.·.மிசை ஏ.·.சினான்
நிரை நிரை நேர் நிரை
- இவை ஒன்றாமல் வந்தன.

**தளை ஏழு வகைப்படும்.**

1. நேரொன்றாசிரியதத் தளை
2. நிரையொன்றாசிரியத் தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

**1. நேரொன்றாசிரியத் தளை**

(நேர் நேர் சேர்ந்த வருவதால் நேரொன்றியாசிரியத்தளை)

எ.கா:

பா.·.ரி பா.·.ரி
நேர்நேர் நேர் நேர் மா முன்நேர்
தேமா தேமா

**2. நிரையொனிறாசிரியத் தளை**

விளம் முன் நிரை வருவது நிரையொன்றாசிரியத் தளை.

எ.கா:

பலர் ∴ பகழ் கபி ∴லர்
நிரை நிரை நிரை நேர்
விளமுன்நிரை

கருவிளம் புளிமா
நிரை நிரை சேர்ந்து வருவதால் நிரையொன்றாசிரியத்தளை.

**3. இயற்சீர் வெண்டளை**

மா முன் நிரையும், விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

எ.கா:

அக.ர முத.ல
நிரை நேர் நிரை நேர் மாமுன் நிரை
நில.வரை நீன்.புகழ்
நிரை நிரை நேர் நிரை விளமுன் நேர்
கருவிளம் கூவிளம்
இயற்சீர் வெண்டளை.

**4. வெண்சீர் வெண்டளை**

காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை

எ.கா:

யா.தா.னும் நா.டா.மல்
நேர் நேர் நேர் நேர் நேர் நேர்
காய்முன் நேர்
தேமாங்காய் தேமாங்காய்
வெண்சீர் வெண்டளை

வெண்பாவிற்கு உரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமே வெண்பாவில் இவ்விரு தளைகள் தவிரப் பிற தளைகள் வரா.

**5. கலித்தளை:**

கனிமுன் நிரை வருவது கலித்தளை.

எ.கா:

தா.மரைப்.பூ குளத்.தினி.லே
நேர் நிரை நேர் நிரை நிரை நேர்
காய்முன்நிரை
கூவிளங்காய் கருவிளங்காய்
கலித்தளை

**6. ஒன்றிய வஞ்சித் தளை:**

கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளை ஆகும்.

எ.கா:

செந்.தா.மரைக் குளத்.தினி.லே
நேர் நேர் நிரை நிரை நிரை நேர்
கனிமுன்நிரை
தேமாங்கனி கருவிளங்கனி
ஒன்றிய வஞ்சித்தளை

**7. ஒன்றாத வஞ்சித் தளை:**

கனிமுன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளை ஆகும்.

எ.கா:

வா.னில்.வளர் திங்.களன்.ன
நேர் நேர் நிரை நேர் நிரை நேர்
கனிமுன்நேர்
தேமாங்கனி கூவிளங்காய்
ஒன்றாத வஞ்சித்தளை

**அடி**

சீர்கள் பல தொடர்ந்து வந்து ஓர் அடியாக அமைந்து செய்யுளுக்கு உறுப்பாவது அடி எனப்படும். அடி ஐந்து வகைப்படும். அவை
1) குறளடி 2) சிந்தடி 3) அளவடி
4) நெடிலடி 5) கழிநெடிலடி

**1) குறளடி:**

அடி தோறும் இரு சீர்களைப் பெற்று வருவது குறளடி எனப்படும்.

எ.கா:

முக்தி வேண்டுமேல்
பக்தி வேண்டுவேல்
சக்தி யம்இது
புத்தி நெஞ்சமே

**2) சிந்தடி:**

அடி தோறும் முச்சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.

எ.கா

பழுதி லாத பயிர்த்தொழில்
பழுதி லாது பயிற்றவே
பழுதி லாது பலதொழில்
பழுதி லாது பயிற்றினர்.

**3) அளவடி:**

அடி தோறும் நான்கு சீர்களைக் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

எ.கா:

தாய்மொழி தாயினும் தகவிற் வோற்றுவன்
ஆய்மொழி யானர்தம் அன்புக்கு ஏற்றுவன்
காய்மொழி யாவதுங் கடிந்து மாற்றுவான்
வாய்மொழி தப்பிடா வகையில் ஆற்றுவன்

**4) நெடிலடி:**

அடி தோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.

ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீற்நிலத்தில்
பாடும் புலவர் புகழ் ஒட்டக் கூத்தன் பதாம் புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென்றே யெனைச் சொல்லுவே

**5) கழிநெடிலடி:**

அடி தோறும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதைக் கழிநெடிலடி எனக் கூறுவர்.

"வாழ்வில் செம்மை வேண்டும்
வாய்மையே பேசல் வேண்டும்
பாழ்செயல் விலக்கல் வேண்டும்
பண்பினை காத்தல் வேண்டும்
தாழ்வினை அகற்ற வேண்டும்
தருக்கினை விடுதல் வேண்டும்
சூழ்நிலை உணர்தல் வேண்டும்
சோம்பலைப் போக்க வேண்டும்

இப்பாடல் அடிதோறும் ஆறு சீர்கள் பெற்றுள்ளதால், இதனைக் கழிநெடிலடி என்பர். பாடலிலுள்ள சீர்களை எண்ணி. இதனை அறுசீர் கழிநெடிலடி என்பர். இது போல் ஏழுசீர்கள் இருந்தால் ஏழுசீர்க் கழிநெடிலடி என்பர். எட்டுசீர்கள் இருப்பதால் எண்சீர்க்கழிநெடிலடி என்று கூறுவர்.

செய்யுள் இயற்றும் முறை பற்றிக் கூறும் இலக்கணம் யாப்பிலக்கணம் எனப்படும். செய்யுளுக்கு உரிய உறுப்புகளைக் கொண்டு செய்யுள் இயற்றும் இலக்கணத்தை விளக்கிக் கூறுவதால் யாப்பிலக்கணம் என அழைக்கப்படுகிறது.

**பா வகைகள்**

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் 'பா' நால்வகைப்படும்.

❖ **வெண்பாவின் பொது இலக்கணம்:**

1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
2. இயற்சீர், (மாச்சீர், விளச்சீர்) வெண்சீர், (காய்ச்சீர்) வரும். பிற சீர்கள் வாரா.
3. இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும், பிறதளைகள் வாரா.
4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றுகொண்டு முடியும்.
5. செப்பலோசை பெற்று வரும்.
6. இரண்டடி முதல், பன்னிரண்டு அடிவரை வரும்.

❖ **வெண்பாவின் வகைகள்:**

வெண்பாவின் வகைகள் ஆறு. அவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்பன.

**1. குறள் வெண்பா:**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டதாய், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது குறள்வெண்பா (குறள் - இரண்டடி)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இக்குறட்பா ஒரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா. (க என்னும் எழுத்து எதுகையாக இரண்டு அடிகளில் ஒன்றி வந்துள்ளது)

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று"

இக்குறட்பா இரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா.

**2. நேரிசை வெண்பா:**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, நான்கு அடிகளைக் கொண்டதாயும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும், முதல் இரண்டடி ஒரு விகற்பமாயும், கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும், நான்கடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது நேரிசை வெண்பா எனப்படும்.

"நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை".

இப்பாடலின் நான்கடியிலும். இரண்டாமடியின் இறுதிச் சீரிலும் ஒரே எதுகை பெற்று ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

உன்னுள் கலைவைத்தாய் ஊக்க மலைவைத்தாய்
கன்னல் மொழியுன்னுள் கள்வைத்தாய் மின்வைத்தாய்
மண்ணில் புதுமை மலர்க்குள் மணம்வைத்தாய்
தண்ணீர்த் தமிழேநீ தாய்.

இ∴து ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

**3.இன்னிசை வெண்பா:**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுத் தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும். இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வரும் மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டு விகற்பத்தானும் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

"தாய்தமக்கே ஒப்பில்லை தாரணியில் எப்பொருளும்
சேய்நம்மைச் சீராட்டி செந்நீரைப் பாலாக்கி
வாய்வழியாய்த் தாமூட்டி வாழ்விக்குந் தெய்வமொன்று
தாய்போலும் உண்டாமோ தான்".

இப்பாடலில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் இல்லை. நான்கடிகளும் ஒரு விகற்பத்தான் வந்துள்ளன. (இரண்டாம் எழுத்து ய் எதுகையாகி ஒன்றி வந்துள்ளது)

"தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும் - தெற்றெனப்
பல்பொரு ளீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு".

இப்பாடலில் இரண்டாம் அடியில் தனிச்சொல் வந்துள்ளது. ஆனால், நான்கடியிலும் மூன்று விகற்பங்கள் வந்துள்ளதால், இ∴து இன்னிசை வெண்பாவாயிற்று.

**4. ப∴றொடை வெண்பா:**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது ப∴றொடை வெண்பா.

"முக்கனியே! முப்பாலே! மூவாத முத்தமிழே!
சொக்கனது மாநகரைச் சூழ்ந்த பெரும்பேறே!
இத்தரைச் சூரியனே! எங்கள் உயிரமுதே!
சித்திரைத் தண்ணிலவே! தேயா மொழிவெற்பே!
செம்மொழி மாக்குடும்பம் சீராட்டும் செம்மொழியே!
எம்மொழிக்கும் மூத்தவளே! என்றும் இருப்பவளே!
பண்புணர்த்தும் ஆசானே! பார்போற்றும் தேனூற்றே!
கண்ணே! நீ ஞாலக் கனி!

இப்பாடல் ஈற்றடி மூன்று சீராயும், ஏனைய அடிகள் நான்கு சீராயும் வந்த ப∴றொடைவெண்பா.

**5. நேரிசைச் சிந்தியல் வெண்பா:**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நேரிசை வெண்பாவைப் போல இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் மூன்றடிகளாய் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

"அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வ னுரைப்ப – சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு".

மூன்றடிகள் உடையதாய் ஒரு விகற்பமாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

**6. இன்னிசைச் சிந்தியல் வெண்பா:**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று மூன்றடி கொண்டதாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

"பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார்முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து".

இ∴து இரண்டாம் அடியில் தனிச்சொல் இன்றி, ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

அலகிட்டு வாய்பாடும் தளையும் கூறுதல்
ஒரு சீரைப் பிரித்து அசை பார்ப்பதே அலகிடுதல்
அலகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிகள்
மெய்யெழுத்தின் பக்கத்தில் ∴இக்குறியிடுக
நெடில் பக்கத்தில் ∴இக்குறியிடுக
இரு குறில் அடுத்து ∴இக்குறியிடுக
ஒற்று அல்லது ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் நேர் எனக் கொள்க.
இரண்டு எழுத்தாய் இருப்பின் நிரை எனப் கொள்க.
இவ்விதியைப் பின்பற்றிக் குறட்பாக்களைப் பிரித்துக் காண்போம்.

| வ.எண். | சீர் | அசை | | வாய்பாடு |
|---|---|---|---|---|
| 1. | இல்∴லா∴ரை | நேர் | நேர் | நேர் தேமாங்காய் |
| 2. | எல்∴லா∴ரும் | நேர் | நேர் | நேர் தேமாங்காய் |
| 3. | எள்∴ளுவர் | நேர் நிரை | | கூவிளம் |
| 4. | செல்∴வரை | நேர் நிரை | | கூவிளம் |
| 5. | எல்∴லா∴ருஞ் | நேர் | நேர் | நேர் தேமாங்காய் |
| 6. | செய்∴வர் | நேர் நேர் | | தேமா |
| 7. | சிறப்∴பு | நிரைநேர்-நிரைபு பிறப்பு | | |

### ❖ ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்:

1. அளவடிளைப் (நான்கு சீர்) பெற்று வரும்.
2. இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) பயின்று வரும். பிற சீரும் வரும். ஆனால் வஞ்சியுரிச்சீர்கள் வாரா.
3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும். பிற தளைகள் கலந்தும் வரும்.
4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்று வரும்.
5. அகவலோசை பெற்று வரும்.
6. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**2. ஆசிரியப்பாவின் வகைகள்:**

ஆசிரியப்பாவுக்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு. அவ்வாசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

**1. நேரிசை ஆசிரியப்பா:**

ஆசியரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று. ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வருவது நேரிசை ஆசிரியப்பா.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீன் டுலகு புரப்பதுவே".

இப்பாடல் ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வந்துள்ளன.

**2. இணைக்குறள் ஆசிரியப்பா:**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தோடு முதலடியும் கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் இருசீர் (குறளடி) அடிகளாயும் முச்சீர் (சிந்தடி) அடிகளாயும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா.

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே."

இப்பாடலில் முதலடியும் ஈற்றடியும் அளவடியாகவும், இடையடிகள் குறளடியாகவும், சிந்தடியாகவும் வந்துள்ளன.

**3. நிலைமண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளும் நாற்சீர் (அளவடி) அடிகளாய் வருவது, நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்

பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்லேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே”

இப்பாடலில் எல்லா அடிகளும் நாற்சீர்கள் கொண்டே அளவடிகளாக வந்துள்ளன.

**4. அடிமறி மண்டல ஆசிரியப்பா:**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

“தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைதல் அறிஞர்தங் கடனே”

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருகின்றது.

**Whatsapp** குரூபில் சேர - **[கிளிக் செய்யவும்]**

**Telegram Channel** ல் சேர - **[கிளிக் செய்யவும்]**